பக்கங்கள்:-பன்னிரண்டு

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 24 ஞாயிற்றுக்கிழமை (06.06.2004) தொலைபேசி - 2223378 ஒலி 170

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
♦ விரைவானது ♦ பாதுகாப்பானது ♦ நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
☞ பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
☞ வங்கிக்கணக்கு அவசியமில்லை
☞ நீடிக்கப்பட்ட சேவை நேரம்
☞ 365 நாள் சேவை
☞ 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 222 7310, 021 222 7555, 021 222 7560
Fax 021 222 7310
E-mail: thirumurugan@eudoramail.com
ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச.முன்பாக) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

# சமாதான முயற்சியில் ஜனாதிபதி 'நழுவல்'

## சு.ப.தமிழ்ச்செல்வன் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

**இலங்கையின் இனப்பிரச்சினை குறித்த சமாதானப் பேச்சு வார்த்தைகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நழுவல் போக்கைக் கடைப்பிடித்து வருவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் குற்றம் சாட்டியுள்ளார்.**

இனப்பிரச்சினை தொடர்பான சமாதானப் பேச்சுவார்த்தைகளின் தாமதம் குறித்தும் நாட்டின் தற்போதைய அரசியல் நிலை தொடர்பாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்று நடத்திய சந்திப்பையடுத்து நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களுடனான சந்திப்பு நேற்று முற்பகல் கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நடுவப்பணியகத்தில் சுமார் நாலரை மணித்தியாலங்களாக நடைபெற்றது.

இச் சந்திப்பில் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் 21 பேரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ அரசியல் துறை மகளிர் பெறுப்பாளர்

(12ஆம் பக்கம் பார்க்க)





அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தங்ககத்தை தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன்நேற்று முன்தினம் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்

## இளைஞர் விவகார விளையாட்டுத்துறை

# பிரதி அமைச்சரின் அலுவலகம் முன் துப்பாக்கிச் சூடு; இருவர் பலி

(கொழும்பு)

இளைஞர் விவகார விளையாட்டுத்துறைப் பிரதி அமைச்சர் ஸ்ரீபதி சூரியாராட்சி அலுவலகத்திற்கு முன்பாக இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவமானது நேற்று நண்பகல் கிருபத்கொட கோகல்வெல பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது. பிரதி அமைச்சர் சூரியாராட்சியின் மெய்ப்பாது காவலராக இருந்த பொலிஸ் அதிகாரியொருவரும் மற்றொருவருமே இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்கள். இவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் போதே வழியில் உயிரிழந்துள்ளார்கள். இத் துப்பாக்கிச் சூட்டுக்கு 9 மில்லிமீற்றர் ரகத் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளை நிற வாகனத்தில் வந்தவர்களே இத்தாக்குதலை நடத்தியதாகவும், தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றதாகவும் அப்போது வீதியால் சென்று கொண்டிருந்த பெண் ஒருவரை மோதிவிட்டுச் சென்றுள்ளதாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கே.வி.சோமபால தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் ஸ்ரீபதி சூரியாராட்சி இச் சம்பவத்தில் எதுவித காயங்களுமின்றித் தப்பியுள்ளார். பிரதி அமைச்சரின் காரியாலயத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் நிறைவு பெற்றதையடுத்து இத

(12ஆம் பக்கம் பார்க்க)

# பத்திரிகையாளர்களின் பாதுகாப்பு அடுத்தவாரம் யாழில் மாநாடு

(திருநெல்வேலி)

சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜி.நடேசன் கொலை செய்யப்பட்டமை உட்பட ஏனைய தமிழ் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகள் எதிர் காலத்திலும் இடம் பெறாமல் தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் மாநாடொன்று அடுத்த வாரம் யாழ்ப்பாணத்தில நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மலையகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிபுக் குழு மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் உட்

(12ஆம் பக்கம் பாாக்க)

# சிப்பாயை சுட்டுக் கொன்றபின் தற்கொலை செய்த சிப்பாய்

## மறவன்புலோவில் சம்பவம்

(திருநெல்வேலி)

இராணுவ வீரர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட தகராறு முற்றியதில் ஒருவரை மற்றவர் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதுடன் தானும் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

மேற்படிச் சம்பவம் நேற்று முன்தினம் முற்பகல் 11.45 மணியளவில் சாவகச்சேரி மறவன்புலோப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் மதவாச்சியைச் சேர்ந்த இராணுவச் சார் ஜன் குணசேகரா லியனகே (வயது37) என்பவரே கொலையுண்டவர் ஆவார். மிலிகிரிய அனுராதபுரத்தைச் சேர்ந்த அஜித்குமார் செனிவிரத்ன (வயது 19) என்பவரே கொலை செய்த பின்னர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டவர் ஆவார்.

இக் கொலைச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் குற்றத்தடுப்புப் பரிசோதகர் எஸ்.பி. என். அபயரத்ன விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

இவ்விருவரது சடலங்களும் பிரேதப் பரிசோதனைக்காகக் கொழும்புக்க அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. (ச-43)

# தமிழீழ மாணவர் எழுச்சி நாள் இன்று 9 இடங்களில் பேரணி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் இன்று காலை 9 மணிக்கு பிரதேச ரீதியாக மாணவர் எழுச்சிப் பேரணிகளுடன் ஆரம்பமாகி முடிவுறும் இடங்களில் பொதுக் கூட்டங்கள் இடம் பெறும்.

யாழ்.நகரப் பகுதியில் காலை 9 மணிக்கு காங்கேசன்துறை வீதி, மனோகராச் சந்தியில் இருந்து ஆராம்பமாகும் எழுச்சிப் பேரணி யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தைச் சென்றடைந்ததும் பொதுக் கூட்டம் இடம்பெறும் பிரதேச ரீதியாக இடம்பெறும் எழுச்சிப் பேரணிகள் கீழ்க் காணப்படும் இடங்களைச சென்றடைந்ததும் பொதுக் கூட்டங்கள் இடம்பெறும்.

யாழ்.இந்துக் கல்லூரி மைதானம், சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், உரும்பிராய் சிவகுமாரன் நினைவுத் தூபிச் சதுக்கம், காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி, நெடுந்தீவு மகா வித்தியாலயம், நயினாதீவு மகா வித்தியாலயம்,

இதேவேளை யாழ்.இந்துக் கல்லூரி மைதானம், சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம் ஆகியவற்றில் இரவு 7 மணிக்கு எழுச்சி நாள் கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (உ)

## பல்கலைக்கழக மாணவனை சக மாணவன் குத்திக் கொன்றான்

## ஸ்ரீ ஜயவர்த்தனபுரவில் பயங்கரம்

(கொழும்பு)

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர் ஒருவர் தனது சக மாணவர் ஒருவரை கூரான ஆயுதமொன்றினால் குத்திக் கொலை செய்துள்ளார்.

குத்தப்பட்ட மாணவன் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தெற்கு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டாரெனவும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் அங்கு அவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தின் போது குருநாகலைச் சேர்ந்த சம்பந்த பண்டார என்ற மாணவனே மரணமானவர் ஆவார். சம்பவம் தொடர்பாக மூன்று மாணவர்கள் கைது செய்யப்பட்டுள் ளதாக மேல் மாகாண தொடர்பான விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண தெற்குப பிராந்திய பிரதிப் பொலிஸ் மாஅதிபர் ரி.பி.பி.பத்திரான தெரிவித்துள்ளார். இரு மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடே இக் கொலைக்குக் காரணமென ஆரம்ப விசாரணைகள் மூலம தெரியவந்துள்ளது. (ச-121)

# 300ஓட்டங்கள் குவித்து; சாதனை வீரர் பட்டியலில் இணைந்தார் நிக்நைட்

மிடில்செக்ஸ் பிராந்திய அணிக்கும் வொரிக் செயிலர் பிராந்திய அணிக்குமிடையில் தற்போது நடைபெற்று வரும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி வீரரான நிக்நைட் லோட்ஸ் மைதானத்தில் 300ஓட்ங்களைக் குவித்துள்ளார்.

இதன் மூலம் இங்கிலாந்தின் புகழ் பூத்த லோட்ஸ் மைதானத்தில் 300ஓட்டங்களைக் கடந்த ஐந்தாவது வீரராகவும் நிக்நைட் தன்னைப் பதிவு செய்துள்ளார்.

இவர் வோக்செயார் அணிக்காக விளையாடி வருகின்ற ஒரு வீரராவார்.இந்த லோட்ஸ் மைதானத்தில் ஏற்கனவே 300ஓட்டங்களைக் கடந்து 4வீரர்கள் சாதனை படைத்திருக்கின்றமை குறிபபிடத்தக்கது.


கிரகெம் கூச்,1990ஆம் ஆண்டு இங்கிலாந்து அணிசார்பாக விளையாடும் போது 333ஓட்டங்களைப் பெற்றிருக்கின்றார். அதற்கு அடுத்தபடியாக இருப்பவர். ஆட்டமிழக்காமல் 316ஓட்டங்களை குவித்துள்ள கொக்ஸ்,இவர் சரே பிராந்திய அணியைச் சேர்ந்த வீரர். 1926ஆம் ஆண்டு சரேப் பிராந்திய அணிக்காக விளையாடும் போது இந்த ஆட்டமிழக்காது 316ஓட்டங்களை பெற்றிருந்தார். அதற்கடுத்ததாக இருப்பவர் ஹொல்மன் இவரும் சரே அணியைச் சேர்ந்த வீரர். 1925ஆம் ஆண்டு இந்த மைதானத்தில் 315 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறார். தொடா ந்து நான்காவது இடத்திலிருப்பவர் அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவர் ஸ்ரின்வோன் .இவர் வொரிச் செயார் அணிக்காக விளையாடும் போது 315 ஓட்டங்களை இந்த லோட்ஸமை தானத்தில் பெற்றுக் கொணடார்.

இந்த வரிசையில் தற்போது நிக்நைட் இணைந்திருக்கிறார். இவர் ஆட்டமிழக்காமல் 303 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறார். லோட்ஸ் மைதானத்தில் 300ஓட்டங்களைப் பெற்றவர்கள் வரிசையில் 5வது வீரராக தன்னை நிக்நைட் பதிவு செய்து கொண்டுள்ளார்.

இதுவரை 17டெட்ஸ் போட்டிகளில் இங்கிலாந்து அணிக்காக விளையாடியுள்ள நிக்நைட் 719ஓட்டங்களைப் பெற்றிருக்கின்றார். 1சதம் மற்றும் அரைச் சதங்களைப் பெற்றிருப்பதோடு அதக பட்ச ஓட்டமாக 113ஓட்டங்களைப் பெற்றிருக்கின்றார்.

ஒருநாள் சர்வதேச போட்டிகளில் இங்கிலாந்து அணிக்காக 100 போட்டிகளில் விளையாடி இருப்பதோடு 3ஆயிரத்து 637ஓட்டங்களைக் குவித்திருக்கிறார் இதில் அதி கூடிய ஓட்டமாக 125ஓட்டங்களைப் பெற்றிருப்பதோடு 5சதங்களும் 25அரைச்சதங்களும் இவற்றில் அடங்குகின்றன.குறிப்பாக 44பிடிகளையும் இவர் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் பிடித்திருப்பது சிறப்பான விடயமாகும்.

தற்போது நியூசிலாந்து அணிக்கெதிராக நடைபெற்று வரும் டெஸ்ட் போட்டியில் இவருக்கு இங்கிலாந்து அணியில் விளையாட இடம் கிடைக்க வில்லை. எனினும் நியூசிலாந்து அணியுடனான ஒருநாள் சர்வதேசப்போட்டியில்விளையாட இவருக்கு இடம் கிடைக்கலாம் எனவும் தெரிவக்கப்படுகிறது. (உ-68)



2004ஆம் ஆண்டுக்கான அமெரிக்கா உடற்பயிற்சி சம்பியன்ஷிப் போட்டியில் இளைஞர் கரணப் போட்டியில் தனது திறமையைக் காட்டும் பிளேனி ஸினிட்

## விளையாட்டுச் செய்திகள்

# ஆஸி. வீரர் பிரெட்வில்லியம்ஸ் உபாதையில் இருந்து மீண்டார்

உபாதைக்கு உள்ளாகியிருந்த அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பிரெட்வில்லியம்ஸ் தற்போது குணமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இவர் பூரணமாகக் குணமடைந்து தற்போது பயிற்சிகளில் ஈடுபட்டுவருவதாகவும் அவுஸ்திரேலிய கிரிக்கெற் நிர்வாகம் அறிவித்துள்ளது

அண்மையில் சிம்பாப்வே அணிக்கெதிராக நடைபெற்ற சர்வதேச ஒருநாள் போட்டித் தொடரின் போது பிரெட் வில்லியம்ஸ் உபாதைக்கு உள்ளாகியிருந்தார்.

இதனை அடுத்து அவுஸ்திரேலியாவிற்கு த் திரும்பிய இவர் தொடர்ந்து சிகிச்சைபெற்று வந்த தன் மூலம் தற்போது குணமடைந்திருக்கின்றார். இவரின் உடல்திடகாத்திரம் குறித்து அவுஸ்திரேலிய கிரிக்கெற் தெரிவாளர்கள் மிக அவதானமாக இருப்பதாகவும் அது தெரிவித்துள்ளது.

இதேவேளை இலங்கை அணிக்கெதிராக நடைபெறவுள்ள டெஸ்ட் கிரிக்கெற் போட்டித் தொடருக்கான அவுஸ்திரேலிய அணியின் பெயர்விபரங்களை கடந்த செவ்வாயன்று அவுஸ்திரேலிய கிரிக்கெற் நிர்வாகம் அறிவித்துள்ளது. இந்தச்சூழ் நிலையில் தான் பூரணகுணமடைந்துள்ளது. தனக்கு மகிழ்ச்சியைத் தருவதாக பிரெட் வில்லியம்ஸ் தெரிவித்திருக்கின்றார். (உ_68)

# ஆஸி .கிரிக்கெட் சுற்றுப்பயணம் முரளி செல்லது ஊர்ஜிதமானது

இம் மாதம் அவுஸ்திரேலியாவிற்கான கிரிக்கெட் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளவுள்ள இலங்கை அணியில் உலக சாதனைப பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரனும் இடம் பெற்றார்.

தூஸ்ரா பந்து வீச்சுத் தொடர்பான சர்ச்சைகளைத் தொடர்ந்து முரளிதரனின் அவுஸ்திரேலிய சுற்றுப் பயணம் சந்தேகத்திற்கு இடமாக இருந்தது எனினும் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நேற்று முன் தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் விஜயத்திற்கான இலங்கைக்குழுவில் ·முரளிதரனின் பெயரையும் வெளியிட்டுள்ளமை அவரின் அவுஸ்திரேலிய பயணத்தை உறுதிசெய்துள்ளது.

தனது பந்து வீச்சுப் பாணியானதுகிரிக்கெட் விதி முறைகளுக்கு முரணானது இல்லைஎன முத்தையா முரளிதரன் கூறி வருகின்றமையால் அவுஸ்திரேலி யாவிற்கான கிரிக்கெட் விஜயத்தினை மேற் கொள்வதன் மூலம் அதனை மேலும் உறுதிப்படுத்த முடியும் என கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை,இலங்கை அணியின் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சுற்றுப்பயணத்திற்கும் தொடரவிருக்கும் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடருக்கும் இலங்கை அணியின் தலைவராக மாவன் அத்தப்பத்து நியமிக்கப் பட்டுள்ளார்.மேலும் இலங்கைக்கான தென்னாபிரிக்க கிரிக்கெட் விஜயத்திற்கும் இலங்கை அணிக்குத் தலைவராக இவரே நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த 3போட்டிகளுக்குமாக பெயர் அறிவிக்கப்பட்டிருந்த இலங்கைக் குழுவில் மாவன் அத்தப்பத்து (அணித்தலைவர்) மகில ஜெயவர்த்தன, குமார் சங்ககார, சனத் ஜெயசூரிய, சமிந்தவாஸ், உப்புள்சந்தன, நுவாங் ஸொய்சா, வீ.எம். டில்சான்,டில்கார பர்னாண்டோ, திலகன் சமரவீர,லதீப்மகலிக்க,ரங்கன ஹேரத், ரமேஸ் களுவிதாரன,ரசன் ஆல் நோட், பௌர்விஸ மக்ரூப் ஆகிய 15 வீர்களின் பெயர் விபரங்கள் அடங்குகின்றன. (உ-68)

# இங்கிலாந்து கிளப் அணியில் ஹர்பஜன்

இந்தியக் கிரிக்கெற் அணியின் ஸ்பின்னர் ஹர்பஜன் சிங் லாஸ்சிங் அணியில் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.



கடந்த டிசம்பரில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் ஹர்பஜனுக்கு விரலில் காயம் பட்டது. இதனால் அவர் 6 மாதங்களாக போட்டிகளில் விளையாடவில்லை. தற்போது காயம் முழுவதும் குணமான நிலையில் லாசிங் கிளப் அணியில் ஒரு மாத காலம் விளையாட ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளார்.

இங்கிலாந்தில் உள்ள கென்ட நகரில் கிளப் அணிகளுக்கு இடையில் கிரிக்கெற் தொடர் நடக்கவுள்ளது. இந்தத் தொடரில் ஹர்பஜன் லாசிங் கிளப் அணியில் பங்கேற்க இருக்கிறார். இதைப் பற்றி ஹர்பஜன் கூறும் போது காயத்தில் இருந்து தற்போது முழுமையாகக் குணமடைந்துள்ளேன்.

இந்திய அணியில் மீண்டும் இடம் பெறுவதற்கு முன் நான் பழையபடி சிறப்பாகப் பந்து வீசவுள்ளேன் என்றார்.

# ஒலிம்பிக் தீபம் ஏற்றும் வாய்ப்பு யாருக்கு?

(புதுடில்லி)

ஒலிம்பிக் தீபம் எதிர்வரும்10ஆம் திகதி புதுடில்லி கொண்டுவரப் படுகிறது. இந்தியாவின் முக்கியஸ்தவர்கள் மற்றும் பிரபல நடிகர், நடிகைகள் உட்பட பலர் ஒலிம்பிக் தீபத்தை ஏந்திச் செல்லவுள்ளனர்.



எதென்ஸ் ஒலிமபிக் போட்டிகளுக்கான தொடக்க விழா நேற்று முன் தினம் சிட்னியில் தொடங்கியது.எதிர்வரும் 10ஆம் திகதி இந்தியா வந்தடையவுள்ளது டில்லியில் உள்ள குதுப் மினாரில் இருந்து தொலைவில் உள்ள தேசிய விளையாட்டுத் திடலுக்கு ஒலிம்பிக் தீபம் கொண்டு செல்லப்படும்.

புதுடில்லி முதல்வர் ஷீலா தீட்சித் கொடி அசைந்து வைக்க, இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் சுரேஷ் தீபத்தை முதலில் ஏந்திச். செல்வார். இந்தியாவின் முன்னணி வீரர்கள் மற்றும் பிரபல நடிகை,நடிகைகள் உட்பட பலர் தீபத்தை ஏந்தி செல்ல உள்ளனர்.அதில் ராகுல் டிராவிட்(கிரிக்கெட்),கபில் [illegible]வ்(கிரிக்கெட்),பாய்சங் பூட்டியா (கால்பந்து), மகேஷ் பூபதி (டெனிஸ்) ஆகிய வீரர்களும் நடிகைகளில் ஐஸ்வர்யாராய், ராணி முகர்ஜி ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஒலிம்பிக் தீபம் புதுடில்லிக்குக் கொண்டு வருவதை முன்னிட்டு குதுப்மினார், செங்கோட்டை மற்றும் தேசிய மைதானத்தில் பலவிதமான கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்திய திரைப்பட உலகின் முன்னணி பாடகர்களான சங்கர் மகாதேவன் மற்றும் கவிதா கிருஷ்ணமூர்த்தி இவர்களின் பாடல்களுடன் பல்வேறு நடன நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (உ)



ஏ.எப்.எல் போட்டியின் 11வது சுற்றில் ஹவ்துரோனனின் எதிர்ப்பையும் சமாளித்து விளையாடும் அடம் மக் விஹாரி.

# சிறுவர் அரங்க முயற்சிகள் சீரிய சமுதாயத்திற்கான முதலீடுகள்

சிறுவர் தம் தேவைகளை நிறைவு செய்வதில் சிறுவர் அரங்கும் முக்கியமான பங்கு வகிக்கிறது. நாடகம், சார்ந்த நடவடிக்கைகளில் சிறுவர் அரங்கும் ஒன்று. சிறுவர் அரங்கினைப் பல்வேறு வழிகளில் சாத்தியமாக்கிக் கொள்ள முடியும். கதையைக் கூறுவது, கூறிய கதையை ஆராய்வது, ஆராயும் வேளையில் கதையில் தேவைப்படும் மாற்றங்களைச் செய்வது, மாற்றஞ்செய்ய வேண்டும் என்பதற்காகச் செய்யாது தேவை கருதி மாற்றங்களைச் செய்வது, செய்த மாற்றங்களைப் பலதடவை சீர்தூக்கிப் பார்ப்பது, சீரோடு அமைந்த கதையெனக் கண்டு கொண்ட பின்னர் கதையை நாடகமாக்குதல், நாடகமாக்கும் நடவடிக்கையில் கதையின் சீரொழுங்கைச் செப்பனிட்டுக் கொள்ளுதல் , செப்பனிட்டு ஒழுங்கமைக் கப்பட்டகதையைச் சட்டகங்களாகப் பிரித்து வகுத்துக் கொள்ளுதல், வகுத்துக் கொள்ளப்பட்ட சட்டகங்கள் ஒவ்வொன்றையும் விரிவாக ஆராய்தல், விரிவான ஆராய்வின் முடிவில் ஒவ்வொரு சட்டகத்திலும் இடம்பெறும் நிகழ்வுகள் ,சூழமைவுகள், சம்பவங்கள், பாத்திரங்கள், உரையாடப்படும் விஷயங்கள், மேற்கிளம்ப வேண்டிய பிரதான செய்திகள் என்பவற்றை வகுத்துக் கொள்ளுதல்.

அவ்வாறு வகுத்துக்கொள்ளும் வேளையில் பாடல்கள், ஆடல்கள், விளையாட்டுக்கள் என்பன இடம்பெற வேண்டுமா என்பதையும் தீர்மானித்துக்கொள்ளுதல், சட்டங்கள், சம்பவங்கள் என்பன விரிவாக ஆராயப்பட்டு நிறைவு செய்யப்பட்ட பின்னர் முறையாக நாடகத்தை எழுதிக் கொள்ளுதல், எழுதி முடித்த நாடகத்தை நடித்துப் பார்த்தல், நடித்துப் பார்க்கும் வேளையில் நாடக எழுத்துருவில் மாற்றங்கள் தேவைப்படுவதாக உணரும் பட்சத்தில் மாற்றங்களைச் செய்து எழுத்துருவைத் திருத்தி அமைத்துக்கொள்ளுதல், நாடக ஒத்திகையின் போது உரையாடல்களை உணர்வு கலந்து மேற்கொள்ளக் கற்றுக் கொள்ளுதல், வார்த்தைகள் ஒவ்வொன்றையும் பேசப்படும் வார்த்தைகளாக்குதல் - அதாவது வார்த்தை ஒவ்வொன்றிலும் பொதிந்துள்ள பொருள், உணர்வு என்பவற்றை ஒலியாலும், தொனியாலும் வெளிப்படுத்துதல்.

பாடல்களை ஊன்கலந்து, உணர்வு கலந்து பாடுதல், பாத்திரங்களின் இயல்பான லயத்தை அறிந்து, அந்த லயம் பிசகாது பேசுதல், பாடுதல், அசைதல், செயல்கள் செய்தல், விளையாடுதல், நாடகத்திற்குத் தேவையான காட்சி அமைப்புக்கள், கைப்பொருட்கள், ஒப்பனைகள், வேட உடுப்புக்கள் என்பவை பற்றிக் கலந்துரையாடி வரைபடங்கள் அமைத்துக் கொள்ளுதல், காட்சி அமைப்பு, வேட உடுப்பு என்பவற்றுக்கு அவசியமான வர்ணங்களைத் தெரிவு செய்தல், காட்சி அமைப்புக்களையும் வேட உடுப்புக்களையும் அமைத்துக் கொள்ளுதல், பாடல்களுக்கான மெட்டுக்களை அமைத்துப் பாடுதல், தேவையான இடங்களில் எவ்வாறு இசையைப் பயன்படுத்தியும், ஒலிகளைப் பயன்படுத்தியும் நாடகத்தின் உணர்வையும், உள்ளடகத்தையும் செழுமைப்படுத்துதல், அனைத்து அரங்க மூலங்களையும் இசைவுபட இணைத்து ஆற்றுகையை ஒரு முழுமையான கலைப் படைப்பாக்குதல் என்றவாறு சிறுவர் அரங்கத் தயாரிப்பு என்பது மிகவும் அர்ப்பணிப்பும், ஈடுபாடும், மகிழ்வும், எதிர்பார்ப்பும், சவால்களும், சந்தோஷங்களும் நிறைந்ததொரு வாழ்க்கைப் பயணமென அமைவதை நாம் உணர்ந்து கொள்ள முடியும். மேலே கண்டவாறுதான் சிறுவர் அரங்க ஆற்றுகை ஒன்றைத் தயா ரித்துக் கொள்ள முடியும் என்று நாம் சொல்ல முற்படவில்லை. சிறுவர் அரங்கத் தயாரிப்புபடி முறையில் சிந்திக்கப்பட வேண்டியவை எனக் கருதப்படுபவற்றையே இங்கு நாம் தொகுத்துள்ளோம். மேற்கண்ட செயற்பாட்டுப் படி முறையில் நாம் சிறுவர்களை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்வோமானால் அது சிறுவருக்கான சிறந்ததொரு கற்றல் நடவடிக்கையாகவும், சிறுவர் தம் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் ஒன்றாகவும் அமைந்துவிடும்.

இந்த அரங்க நடைமுறை மூலம் சிறுவர்கள் சுயமாகச் சிந்திக்கும் திறனையும், சுதந்திரமாகச் செயற்படும் சூழலையும் ஜனநாயக மரபு எனக் கருதப்படும், கலந்துரையாடல், தன் கருத்தைத் தெளிவாக உரத்துக் கூறுதல், தனது உரிமைகளை உணர்ந்து கொள்ளுதல்,

**குழந்தை ம.சண்முகலிங்கம்**

அந்த உரிமைகளுக்காக வாதாடுதல், மாற்றுக் கருத்துக்கு செவிமடுத்தல், அக்கருத்தை மதிப்பிடுதல், அதில் சரியெனக் கண்டவற்றில் ஏற்றுக் கொள்ளுதல், தனது கருத்துக்களில் தவறென உணர்த்தப்படும் இடத்து பலவற்றைக் கைவிடுதல், கூடிக்கருமமாற்றுதல், பொது நோக்கு ஒன்றுக்காக ஒன்று கூடி உழைதல், கருத்தூன்றிக் கருமங்களைச் செய்தல், சுதந்திரத்தோடு கூடிய சுய கட்டுப்பாட்டை உணருதல், எல்லாவற்றையும் கூர்ந்து அவதானித் தல், அனைத்தையும் பகுப்பாய்வு செய்து பார்த்தல், தன்னைத் தெளிவான முறையில் உடலாலும், குரலாலும் வெளிப்படுத்துதல், கலைகளை நயத்தல், இரசனையை வளர்த்தல், மனிதர் மீது நம்பிக்கை கொள்ளுதல், மனிதர் யாவரையும் பாத்திரங்களாகப் பார்த்தல், நடு நிலை நோக்கோடு நின்று அனைத்தையும் அவதானித்தல், சுய நலப் போக்குகளைக் கைவிடுதல், சிறந்த சமூக விழுமியங்களை அறிதல், வாழ்க்கையின் சுகதுக்கங்களை அறிந்து கொள்ளுதல், பொறுப்புக்களை ஏற்றல், கல்வி யில் மிகுந்த நாட்டம் கொள்ளு தல், உயர் இலட்சியங்களை நடைமுறைப்படுத்துதல் என பல்வேறுபட்ட சீரிய பண்புகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

எனவே சிறுவரைச் சிறந்த முறையில் வளர அனுமதிக்கும் சிறுவர் அரங்க முயற்சிகளை நாம் மேற்கொள்வோமாக. சிறுவர் அரங்க முயற்சிகள் சீரிய சமுதாயத்திற்கான முதலீடுகள் என் பதை நாம் உணர்ந்து கொள்வோம்.



தென்புலோலி புற்றளை மகாவித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழா நிகழ்வில் இடம்பெற்ற "என்னைப் பார்த்துச் சிரிக்காதே" எனும் நாடகத்தில் செல்வன் ரீ.துவாரகன், செல்வி வி.தாட்சாயணி ஆகியோர் தோன்றும் காட்சி.
படம்: பருத்தித்துறை நிருபர்.



கவிஞர் ச.வே.பஞ்சாட்சரத்தின் 'இணுவை முருகன் பிள்ளைத் தமிழ்' நூல் வெளியீட்டு விழாவில், சிவஸ்ரீ உ.அபிராஜிதக் குருக்கள் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் இணுவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் செ.கதிர்காமதாசனம், செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன், பேராசிரியர் சபா ஜெயராஜா, தலைவர் செ.சோதிப் பெருமாள் மற்றும் நூலாசிரியர் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

கடலில் சேரும் விவசாய உரங்களில் இருந்து பெறப்படும் நைதரசனினால் பல்கிப் பெருகும் பாதகமான அல்காக்கள் ஒட்சிசன் வாயுவைப் பயன்படுத்தித் தீர்ப்பதால் உலகம் பூராவும் 150 வரையான கரையோரப் பகுதிகள் இறந்த வலயங்கள் ஆகியுள்ளன.


## சிறுவிளம்பரம்

### நாடக நூல்கள்

கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய i) யாழ்ப்பாணமா? கொழும்பா? ரூபா 50/-, ii) எங்கள் நாடு ரூபா 75/-, iii) வானொலி நாடகம் எழுதுவது எப்படி ரூபா 150/- 17 நாடகங்கள் கொண் டவை வாங்கிப் படியுங்கள், நடியுங்கள். (8548)


## சிறுமி மீது வல்லுறவு சந்தேகத்தின் பேரில் இளைஞர் கைது

(வவுனியா)

வவுனியா தாளிக்குளம் பகுதியில் 15 வயதுச் சிறுமி ஒருத்தி பாலியல் வல்லுறவுககுப் பின்னர் கழுத்து நெரித்தக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 30 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த விழாயக்கிழமை இரவு பிரஸ்தாப இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பிரஸ்தாப இளைஞர் மீது பாலியல் பலாத்காரம் தொடர்பாக நீதி மன்றில் ஏற்கனவே வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

தொழிலாளர் கல்விச சான்றிதழ் கற்கை நெறி - 2002 / 2003

ஐந்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமும், ஆண்டு 9 (தரம் 8) கல்வித்தகைமையும் கொண்ட அரசாங்க/ அரச கூட்டுத்தாபன, தனியார் நிறுவனங்களில் அல்லது சுய தொழில் (விவசாயம், மீன்பிடி மற்றும் குடிசைக் கைத்தொழில் உட்பட) ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கான "தொழிலாளர் கல்விச் சான்றிதழ்" கற்கைநெறிக்கு அனுமதி பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவத்தையும் மேலதிக விபரங்களையும் பல்கலைக்கழக சிறாப்பரின் கரும பீடத்தில் ரூபா 20 செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினை நேரில் பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பித்து அல்லது பல்கலைக் கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட 20 ரூபாவுக்கான காசுக் கட்டளை/ தபாற் கட்டளையுடன் சுய விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ.மீ X 10 செ.மீ அளவினதான கடித மேலுறையுடன் "உதவிப் பதிவாளர்/ தேர்வுகளும் அனுமதிகளும் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி" என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி 30.06. 2004.
தொழிலாளர் கல்விச் சான்றிதழ் பாடநெறியில் பங்கு பற்றுவோர், எழுத்துத் தேர்வு மூலமாகத் தெரிவு செய்யப்படுவர்.

குறிப்பு: 10 வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமுடையவர்களிடமிருந்து ஆண்டு 9 இலும் குறைவான கல்வித் தகைமையுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

(C/214) **பதிவாளர்.**

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கை நெறி - 2001 / 2002
தொழிலாளர் கற்கையில் டிப்ளோமா கற்கை நெறி - 2001 / 2002
(இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை)

மேற்குறிப்பிட்ட பரீட்சைகள் எதிர்வரும் 05.07.2004 ஆரம்பமாகும்.

பரீட்சார்த்திகள் தொழிலாளர் கல்வி அலகில் பெறப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து 18.06.2004 ஆம் திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மீள் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணமாக ஒரு பாடத்திற்கு ரூபா 50 வீதம் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ அல்லது நிதியாளர் யாழ். பல்கலைக்கழகத்திலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

முக்கிய குறிப்பு : மாணவர்கள் தங்களுக்குரிய அனுமதி அட்டைகளை 30.06.2004 ஆம் திகதி தொழிலாளர் கல்வி அலகு, யாழ். பல்கலைக்கழகத்தில் தமது யாழ் . பல்கலைக் கழக அடையாள அட்டையுடன் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

(C/215) **பதிவாளர்.**

## புலிகள் நிபந்தனையைக் கைவிட்டால்

# சமாதானப் பேச்சுவார்த்தைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவோம்

## ஜே.வி.பி. எம்.பி. இ.சந்திரசேகரன்

(லண்டன்)

**தமிழீழ விடுதலைப்புலிகள் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார் என்றால் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்குத் தேவையான ஒத்துழைப்பை நாம் வழங்குவோம்.**

**ஆனால் விடுதலைப்புலிகளோ, நிபந்தனை ஏதுவும் தாம் விதிக்கப்போவதில்லை எனக் கூறிக்கொண்டு இடைக்கால நிர்வாக சபையை வடக்கு-கிழக்குக்கு தந்தால் தான் நாம் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவோம் என மிரட்டுகின்றார்கள்.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன்.

தமிமீழ விடுதலைப்புலிகளின் இடைககால நிர்வாகசபை கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்ளக் கூடாது என மக்கள் விடுதலை முன்னணி அரசுக்கு கூறுவதன் நோக்கம் என்ன? என்பது குறித்து லண்டன் பி.பி.சி தமிழ் சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து வழங்கிய செவ்வியின் விபரம் வருமாறு,

இடைக்கால நிர்வாகசபை குறித்த விடுதலைப் புலிகளின் திட்டவரைபின் உள்ளடக்கத்தைப் பார்க்கவேண்டும்.

அநத உள்ளடக்கத்தில் பெரும் சிக்கல்கள் இருக்கின்றன.

குறிப்பாக,வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாக சபையை வழங்குவதற்கு பெருமபான்மையின மக்கள் விரும்பவில்லை இது முக்கியமான சிகக லான விடயமாகும்.

அடுத்த விடயமென்னவென்றால், இடைக்கால நிர்வாகசபை வழங்கப்பட்டால்,அங்குள்ள மாற்று அரசியல் கட்சிகள் அதாவது விடுதலைப் புலிகளுக்கு எதிரான அரசியல் கட்சிகள் அங்கிருந்து வெளியேற வேணடிய நிலை உருவாகும்.

இவைதவிர, தமிழீழ விடுதலைப் புலிகள் தனிநாடு ஒன்றை அமைப்பதற்கு உரிய வழிவகைகளைப் பெற்றுக்கொடுப்பதாக இந்த இடைக்கால நிர்வாகசபையின் திட்டவரைபு அமைகின்றது.

இத்தகைய சிக்கல்கள் நிறைந்த இடைக்கால நிாவாக சபையை வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு வழங்குவது என்பது சாத்தியப்படாத விடயமாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் உண்மையாக சமாதானத்தை விரும்புகின்றார்கள் என்றால் நிபந்தனைகள் எதையும் விதிக்காமல் கடந்த 20 வருட காலமாக நிலவி வந்த இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தடையாக இருக்கும் பிரதான காரணிகளை அரசுக்கு எடுத்துக் கூறி அதுபற்றி ஆராய்ந்து பேசி தீர்வுகாண முன் வரவேண்டும்.

இதனையே நாம் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் வலியுறுத்திக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் விரும்புகின்ற சமாதானத்தை உருவாக்க முதலில் இரு தரப்பினரும் இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும்.

யுத்தத்தால் வடக்கு-கிழக்கு மக்கள் மட்டும் பாதிக்கப்படவில்லை. சிங்கள இளைஞர்களும் பாதிப்படைந்திருக்கின்றார்கள். எனவே மீண்டும் ஓர் யுத்தம் ஏற்படாதிருக்க இரு தரப்பினரும் உறுதி பூண வேண்டும் என்றார்.(உ-60,10)

## நாடாளுமன்ற உறுப்பினர்களாக நாளை மறுதினம் ஐவர் பதவியேற்பு

(கொழும்பு)

நாட்டின் பிரதான கட்சிகளைச் சேர்ந்த 5பேர் நாளை மறுதினம் நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவிப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஐக்கிய தேசிய முன்னணி ஆகிய கட்சிகளில் ஏற்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடங்களை நிரப்புவதற்காகவே இவ் ஐவரும் பதவிப் பிரமாணம் செய்துகொள்ளவுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த 3பேரும் ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த 2பேருமே இவ்வாறு சபாநாயகர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்யவுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த 5பேர் மாகாணசபை தேர்தலில போட்டியிடுவதற்காக தமது பதவிகளை இராஜிநாமாச் செயததால் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்பவே இவ் ஐவரும் தேசியப் பட்டியல் மூலம் தெரிவு செய்யப் பட்டுள்ளனர் என பாராளுமன்ற செயலாளர் நாயகம் அறிவித்துள்ளார். (உ-4,61)

## ஜப்பான்- இலங்கை நட்புறவை பலப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

ஜப்பானிற்கும்-இலங்கைக்கும இடையில் நீண்டகாலமாக இருந்து வரும் நட்புறவை பலப்படுத்தி அதனை விஸ்தரிக்கும் வகையில் ஜப்பானியத் தூதுவர் அக்ஷியோ சூடா, வெளிவிவகார அமைசசர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்துக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

நேற்று வெளிவிவகார அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், கூட்டு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து ஆராய்வதற்கென இலங்கை வந்துள்ள ஜப்பானிய வர்த்தக சம்மேளனம் மற்றும் இலங்கை வர்த்தக சம்மேளனம் என்பன இணைந்து இலங்கை -ஜப்பான் வர்த்தக ஒத்துழைப்புக் குழுவின் கூட்டம் ஒன்றை நடத்துவது பற்றியும் விாிவாக ஆராயப்பட்டது.

.இதன்மூலம் முக்கியமாக கிராமிய மட்டக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்ய முடியும் என வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஜப்பானிய தூதுவரிடம் எடுத்துக் கூறினார்.(உ-60,10)

## ஐ.தே.மு. அமைச்சுக்களின் ஊழல் மோசடிகள் அம்பலம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சிக் காலத்தில் கொழும்பு-கட்டுநாயக்க நெடுஞ்சாலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்தியதில் பெருமளவு லஞ்ச ஊழல்களும் துஷ்பிரயோகங்களும் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சிக்காலத்தில் அமைச்சுக்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் பற்றி ஆராய்வதற்கென தற்போதைய அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட 3 பேர் கொண்ட குழுவினரே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

ஐக்[illegible] தேசிய முன்னணி அரசின் காலத்தில் நெடுஞ்சாலைகள் அமைச்சில் கடமையாற்றிய அதிகாரிகள் கட்டட நிர்மாண நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்களை வழங்கியபோதே பெருமளவு மோசடிகள் இடம்பெற்றதாகவும் அந்தக் குழுவினர் மேலும் கூறுகின்றனர். (உ-60,10)

## ஸ்ரீ.மு.கா குறித்த தீர்க்கமான முடிவு

(புத்தளம்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தற்கால நிலை,அதன் செயற்பாடுகள் பற்றி அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா தீர்க்கமான முடிபு ஒனறை மேற்கொள்ளவுள்ளது.

புனித அல்-குர்ஆன் மற்றும் நபி முஹம்மத் (சல்லலலாஹு அலைஹி வசல்லம்) அவர்களின் போதனைகளின் அடிப்படையில் யாப்பை அமைத்துள்ளதாகச் சொல்லபபடும் அக்கட்சியின் தற்போதைய நிலை குறித்து அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா தனது சரியான நிலைப்பாட்டை வெளிபபடுத்த வேண்டுமென நாடளாவிய ரீதியில் எதிர்பார்க்கப்படுகிறது.

இதனையடுத்து, எதிர்வரும் 10ஆம திகதி அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் நிறைவேற்றுக் குழு வசேடமாகக் கூடி இத் தீர்மானததை மேற்கொள்ளவுள்ளது. (உ-15)

## மாடிக்கட்டடம் நிர்மாணம்

(பருத்தித்துறை)

10இலட்ச ரூபா செலவில் வரணி மகா வித்தியாலயத்தில் மாடிக் கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

சுமார் 5இலட்சம் ரூபா செலவில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் இப்பாடசாலையில் மலசலகூடங்களை நிர்மாணித்துள்ளது.(உ-52)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெற்றுவரும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு "சூடிக்கொடுத்த சுடர்க் கொடி" என்னும் விடயம் பற்றி அதிபர் க.க.யோகநாதன் சிறப்புரை நிகழ்த்தவுள்ளார். (உ-35)

## பொங்கல குளிர்த்தி

(மருதங்கேணி)

மந்திகை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் குளிர்த்தி வைபவம் எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. (உ)

## ஓய்வு பெற்றார்

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் எஸ். கனகரத்தினம் சேவையிலிருந்து இளைப்பாறியுளளாா். இதையடுத்து யாழ். அரச அதிபர் எஸ். பத்மநாதனின் உத்தரவின் பேரில் நிர்வாக உத்தியோகத்தர் எஸ். சோமசுந்தரத்திடம் இவரது பொறுப்புக்களை ஒப்படைக்கப்பட்டுள்ளன.(உ-52)

## கலைஞர்களின் விபரம் திரட்டல்

(கரவெட்டி)

கடந்த 1983ஆம் ஆண்டு ஜுலை மாதம் நடைபெற்ற வன்செயல்களினால் உயிர், உடைமை இழப்பு உட்பட அனைத்து வித பாதிப்புக்கும் உள்ளான திரைப் படத் துறையைச் சேர்ந்த தயாரிப்பாளர்கள் இயக்குநர்களின் விபரங்களை சலனசித்திரம் அமைப்புத் திரட்டி வருகினறது.

மேற்படி ஜுலைக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நட்ட ஈடுகளை வழங்க அரசு முன்வந்திருப்பதை அடுத்தே இவ் விபரத் திரட்டலில் சலனசித்திரம் ஈடுபட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட கலைஞர்களின் உறவினர்களை சலன சித்திரம் த.பெ.இல37, தெஹிவளை என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ)

## தையல் பயிற்சி

(பருத்தித்துறை)

வரணி மகாவித்தியாலயத்தில் பாடசாலையை விட்டு வெளியேறிய யுவதிகளின் நன்மை கருதி முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் தையல்பயிற்சி நெறி ஆரம்பிக்கப் பட்டுள்ளது. (உ-52)

## சலன சித்திரம் ஆதரவுக் கரம்

(கரவெட்டி)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்புப் பிரிவு பிரகடனப் படுத்தியுள்ளதும் தற்போது அனுஷ்டிக்கப்பட்டு வருவதுமான "சுற்றுச் சூழல் விழிப்புணர்வு மாதம்" மற்றும் ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ளதும் எதிர்வரும் 26ஆம் திகதி முதல் ஜுலை 2ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளதுமான "போதைவஸ்து ஒழிப்பு வாரம்" என்பன வெற்றியளிக்கும் வகையில் சகல ஒத்துழைப்புக்களையும் வழங்குமாறு தனது சகல அங்கத்தவா்களையும் "சலன சித்திரம்" அமைப்பு கேட்டுள்ளது. (உ)

## அறக்கொடை வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

கலைப்பேரரசு ஏரி பொன்னுத்துரை ஞாபகார்த்த விருதிற்கான அறக்கொடை வழங்கும் வைபவம் கடந்த புதன்கிழமை கலாநிதி க.குணராசா தலைமையில் அகில இலங்கைக் கம்பன் கழக மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலாநிதி க. சொக்கலிங்கம் மற்றும் கம்பவாரிதி இ.ஜெயராஜ் ஆகியோரின் சிறப்புரை இடம்பெற்றது. அத்துடன், நயினை கி.கிருபானந்தா அறக்கொடை வைப்பு நிதியான ரூபா ஒரு லட்சம் ரூபாவை குடும்பத்தினரிடம் கையளித்தார். (உ)

## பயிற்சிப் பட்டறை

(யாழ்பாணம்)

யாழ். மாவட்டத்தில் விஷேட தேவைகளையுடைய வலது குறைந்தவர்களிற்கான புனர்வாழ்வுத் திட்டமும் பயிற்சிப்பட்டறையும் எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மு.ப 9.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பல முக்கிய விடயங்கள் குறித்துக் கலந்துரையாடவிருப்பதால்,கிராம அபிவிருதத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தி யோகத்தர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு நிதியம் மற்றும் யு.என். எச். ஈ. ஆா போன்ற சா்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் கலந்து கொள்ளவிருப்பதாக மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்துள்ளார். (உ-19)

## சந்திப்பு

(கரவெட்டி)

சலன சித்திரம் மாவட்ட கலைச சங்கங்களின் சம்மேளனத்திற்கும் கலாசாரம் தேசிய விழுமியங்கள் அமைச்சர் விஜிதஹேரத்திற்கும் இடையிலான சந்திப்பு ஒன்று சலன சித்திரம் அமைப்பினா், ஸ்தாபகர் க. தேவதாசன் தலைமையில் எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இசசந்திப்பில் தேசியத் திரைப் படக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக முறைமை மற்றும் எதிர்காலச் செயற்திட்டங்கள் சம்பந்தமாக கலந்து பேசி முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (உ)

# இருமுகம் கொண்ட ஒரு தலைவி உருவாகி வருகிறார்

எதை இழந்தும் கூட்டணி அமைத்து, எதைக் கொடுத்தும் அமைச்சரவை அமைத்து, எப்படியும் ஆட்சியைத் தொடர்ந்து நடாத்துவதில் குறியாக உள்ள ஜனாதிபதி சந்திரிகா, எந்த விதத்திலும் சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பித்து விடுவதிலேயே தனது கவனம் அனைத்தையும் திருப்பியிருக்கிறார்.

ஒரு பக்கம் சமாதானத்தை மீண்டும் ஆரம்பிப்பது போன்ற ஒரு மாயயை உருவாக்கி, சர்வதேச நாடுகளிடம் தான் ஒரு சமாதான விரும்பி என்ற தோற்றத்தை உருவாக்கும் அதே சமயத்தில், புலிகளை மட்டும் வைத்துக்கொண்டு சமாதானம் பேசமாட்டேன், நோர்வேயை துணைக்கு அழைக்கமாட்டேன் போன்ற ஜே.வி.பி.யுடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் காப்பாற்ற சில இரகசியத் திட்டமிடல்களையும் நடாத்திக் கொண்டு, இருமுகம் கொண்ட ஒரு தலைவியாக உருமாறி வருகிறார் சந்திரிகா.

சாதாரணமாகப் பார்க்குமிடத்து, அட நம்ம அம்மா நன்றாகத் திருந்தி விட்டார், நல்லவற்றைச் செய்யப் போகிறார் என்பது போன்று தான் அவரது நடவடிக்கைகள் காட்சி தரும். அத்தகையதொரு தோற்றப்பாட்டைத்தான் அம்மையாரும் உருவாக்கிவிடத் துடியாய்த் துடிக்கிறார். ஆனாலும் வரலாறு அதுவல்ல!

சற்றே பின்நோக்கி வரலாற்றைத் தூசி தட்டிப் பார்த் தால், 1994ல் சந்திரிகா பதவி யேற்றதும், இதே நிலைப்பாட்டைத்தான் எடுத்தார் அவர். உடன டியாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த் தையை ஆரம்பித்து, அதற்கான சர்வதேச அங்கீகாரத்தையும் பெற்று, ஈழத் தமிழர்களுக்கு எதிராக யார் கிளம்பினாலும் அத்தனை தடை களையும் தகர்த்தெறிந்து, தனி யொருவராக தமிழின உரிமைகளைப் பெற்றுத் தருகிறேன் பார் என்று வீராப்புடன் கிளம்பியவர் இந்த சந்திரிகா தான்.

### ஜனாதிபதியின் நாடகப் பயிற்சி

ஆனால் அந்தப் படாடோபங்கள் அத்தனையும் வெறும் கண்துடைப்புக்கள் என்பதை தமிழர்கள் உணர்ந்துகொண்ட போது, அது பிந்தியஞானமாகவே காணப்பட்டது. எதை நோக்கி அந்த நாடகங்களுக்குப் பயிற்சியெடுத்தாரோ, அதன்படியே அனைத்தும் நடந்தேறின.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு, தமிழர்களுக்கு நியாயமான உரிமை, வடக்கு கிழக்கு இணைந்த தனியாட்சி இப்படி அளவுக் கதிகமான கவர்ச்சித் திட்டங்களை அதிரடி யாக அறிமுகம் செய்து, அதற்கு நோர்வே நாட்டின் அனுசரணையை வரவேற்ற போது, தமிழர்கள் புளகாங்கிதமடைந்தது என்னவோ உண்மைதான். ஆனால் விடுதலைப் புலிகளின் தலைவரை ஒழித்தே தீருகிறேன் பார் என்று கங்கணம் கட்டி எதிரணியில் நின்ற இந்தியாவை, சந்திரிகா இரகசியமாகச் சீண்டுகிறார் என்பதை அப்போது யாரும் அனுமானிக்கவில்லை.

தமிழர்களின் பிரச்சனையில் நேர்மையாகச் செயற்பட எத்தனிப்பது போன்ற முயற்சிகளை எடுக்கும் அதே நேரத்தில், ஏற்கனவே உருவான எதிரிகளை உசுப்பி விடுவதில் வெற்றி கண்டார் சந்திரிகா. ஒரு பக்கம் இந்தியாவின் எதிர்ப்பைக் கண்டனத்தைக் கிளப்பிவிட்ட அதேவேளை, மறுபக்கம் சிங்களப் பேரினவாதக் கொள்கைகளைக் கொண்ட பௌத்த பிக்குகளையும் அப்போது தனிக்கட்சிகளாக இயங்கிய ஜே.வி.பி. போன்ற இனவாதக் கட்சிகளையும் மோசமாகக் கோபமடைய வைத்தார்.

வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் பலத்த எதிர்ப்புக் கிளம்பிய போது, அத்தனை எதிர்ப்புக்களுக்கெதிராகவும் தான் தமிழர்களின் சமாதான விரும்பியாக, விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடாத்துகிறேன் என்று பகிரங்கமாக அறிவித்தார்.

நோர்வே அனுசரணையாளர்களும் அவரின் வாககை நம்பி, வேகமாக செயலில் இறங்கினார்கள். எதையும் எழுத்தில் பெற்றுக்கொள்ளாது ஜனாதிபதி சொல்கிறார் என்ற ஒரே காரணத்தை மட்டும் வைத்துக்கொண்டு விடுதலைப் புலிகளைப் பேச்சு மேசைக்கு அழைத்து வந்தார்கள் நோர்வேத் தரப்பினர். திட்டங்கள் சரியாக நடக்க, வெற்றிகளும் அம்மையார் வசமே வந்தன. ஏற்கனவே எதை நோக்கிக் காய்களை நகர்த்தியிருந்தாரோ, அதனது விளைவுகள் சமகாலத்தில் அதீத விளைச்சலை அவருக்குப் பெற்றுத் தந்தன.

விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சு என்றதுமே, இந்தியா குய்யோ முறையோ என்று கோஷ மெழுப்ப, பிக்குகளும் இனவாதிகளும் சிங்களத்தைக் கொல்கிறார் சந்திரிகா என்று ஆக்ரோசக் குரலிட, சந்திரிகா ஒரு வலுவான சமாதானப் புறா என்ற பெயரை மட்டும் சர்வதேச உலகில் பெற்று மகிழ்ந்தார். விளைவு விரைவில் விபரீதமாக மாறிப்போனதை பின்னைய வரலாறுகள் பதிவுசெய்தன. ஏதோ அடுத்தவர்கள் விரும்பாததால் பேச்சை முறித்துக் கொள்வது போல் நாடகமாடிய சந்திரிகா, தனக்கு ஏற்கனவே கிடைத்திருந்த சர்வதேச வரவேற்பைப் பயன்படுத்தி, ஒரு தமிழரை வெளிநாட்டமைச்சராக நியமித்து, அவர் மூலமே சர்வதேசத்தில் தமிழினத்திற்கு அவப்பெயரையும் தமிழரின் பிரதிநிதிகளென்று கூறப்பட்ட விடுதலைப் புலிகளுக்கு பரந்த அளவில் தடை உத்தரவுகளையும் வேக வேகமாகப் பெற்றுப் பதிவு செய்தார்.

இப்போது காய்நகர்த்தல் இன்னும் இலகுவானது. சர்வதேசத் தடைகளும் எதிர்ப்பும் கிடைத்த போது சிங்கள இனவாதிகளின் ஆதரவு பட்டென்று இடம்மாறி அவர் வசம் வந்தது. விடுதலைப் புலிகளுக்கெதிரான எதிர்ப்பலைகளை வீசிக்கொண்டிருந்த இந்தியா, தனது ஆதரவை முழுமையாக சந்திரிகாவுக்கு வழங்கியது. போரின் மூலம் சமாதானம்! போரின் மூலம் சமாதானம் என்ற புதிய நிலைப்பாட்டை எடுப்பதற்கு சந்திரிகா சமைத்த பாதைகள் எல்லாம் இப்போது தெளிவாக இருந்தன. போர் தொடங்கிய பின்னரே சிங்கள இனமும் சர்வதேச நாடுகளும், இது சமாதானத்திற்கான போரா இல்லை, தமிழினத்தையே சரிக்கட்டிவிடும் போரா என்பதை இனம் கண்டு கொணடன. ஆனாலும் என்ன, அப்படி இனம் காணப்படும் முன்னரே சந்திரிகா தன் சொந்த மாமனை வைத்துக்கொண்டு தன் சதிராட்டத்தை கோர வெறியாட்டமாக ஆடி முடித்து ஓய்வெடுக்க ஆரம்பித்திருந்தா.

### தடை - தடை- தடை....

செய்தித்தடை, பேச்சுத்தடை, பிரயாணத்தடை, வர்த்தகத்தடை, பத்திரிகைத்தடை, உணவுத்தடை, எண்ணெய்த்தடை, தமிழனைத் தவிர வேறெவனும் தமிழ்ப்பகுதிக்குச் செல்லத் தடை, அப்பகுதியிலிருந்து வெளியே யாரும் வருவதற்குத்தடை, தண்ணித்தடை, தகவல் தடை, வந்தவர்கள் தங்கத்தடை, தங்கியவர் சிறையில் தடை, சிறையிலிருப் போர் விசாரிக்கத்தடை, கொலைகளை விசாரிக்கத் தடை, தடை-தடை-தடை என்று எதற்கெடுத்தாலும் தடை போட்டு, இந்தத் தடைகளைப் பற்றி யாருமே கதைக்காத வண்ணம், தெற்கில் வாழ்ந்தவர்களையும் வந்து போனவர்களையும் திசை திருப்ப விடுதலைப் புலிகளுக்கெதிரான அதீத பிரச்



சாரத்தை முடுக்கி விட்டு, ஆயிரமாயிரம் உயிர்களையும் பல கோடி உடைமைகள், சொத்துக்களையும் களேபரம் செய்து மகிழ்ந்தார்.

தமிழினத்தை அழித்தொழித்து, வடக்கு கிழக்கை இன்னுமொரு சோமாலியாவாக மாற்றிவிடும் இஸ்ரேலியத் திட்டத்தை மிக விரைவாக முடுக்கி விட்ட சந்திரிகா, இந்தப் போருக்கான செலவீனத்தால், தன்னினமும் பொருளாதாரச் சிக்கல்களில் மாட்டிக் கொண்டு அல்லலுற்றதை ஏனோ அவதானிக்கத் தவறிவிட்டார். தெற்கில் அவரது சொந்த இனமே வறுமையின் பிடியிலும், பாதுகாப்புக் கெடுபிடிகளிலும், மனித வெடி குண்டுகளிலும் அகப்பட்டுத் திக்குமுக்காடியது.

சிங்கள இனம் தன் கசப்பை வெளிப்படுத்திய தேர்தல் மூலமும் போர் மூலம் சமாதானம் என்பது வெறும் பொய்முகம் என்று சிங்கள இனமே கண்டுகொண்ட பின்னரே, ரணில் கட்சி ஆட்சியமைப்பதற்கு அந்த இனம் ஒரு வாய்ப்புக் கொடுத்தது. முழுப்பலம் பொருந்திய ஜனாதிபதி கதிரையில் சந்திரிகா அம்மையார் இருந்தும் கூட, அவரது கட்சியைத் தூக்கியெறிந்து தங்கள் எதிர்ப்பையும் கசப்பையும் வெளிப் படுத்தினார்கள் சிங்கள மக்கள்.

சிங்கள மக்களின் தீர்ப்பைக் கனகச்சிதமாகப் புரிந்து கொண்ட ரணில் அரசு, அசுர வேகத்தில் சமாதானப் பேச்சுக்களை முடுக்கி விட்டது.

பாதுகாப்புக் கெடுபிடிகள் நாடளாவிய ரீதியில் தளர்த்தப்பட்டது, மனித வெடிகுண்டுகளும் தினமும் தெற்கில் வந்திறங்கும் இராணுவ உடல்களும் நிறுத்தப்பட்டன, வறுமையின் கோரம் தளர்வடைந்து வியாபாரமும் பொருளாதாரமும் இணைந்து வளர்வதை அவதானிக்க முடிந்தது.

இருந்தாலும் ஆட்சிக் கொலுவில் அமைதியாக அமர்ந்திருந்த சந்திரிகா, தனது சூழ்ச்சித் திட்டமிடலை மட்டும் எந்தச் சிங்களவரின் நன்மைக்காகவும் தாரை வார்த்துக் கொடுத்துவிட விரும்பவில்லை. சிங்களமோ பௌத்தமோ இஸ்லாமோ எதனது நன்மை பற்றியும், ஏன் சிறீலங்கா என்ற நாட்டின் நன்மை பற்றியும்கூட சிந்திக்கும் நிலையில் சந்திரிகா இல்லை. அவரது குறி அனைத்தும் மீண்டும் தனக்குக்கீழ் ஆட்சியமைப்பைக் கொண்டு வருவது மட்டுமே. இதற்காக யாருடன் இணைந்து கொள்ளவும்

**கனடாவிலிருந்து**
**குயின்ரஸ் துரைசிங்கம்**

தயாராக இருந்தார் அம்மையார்.

பிரிந்து போன அத்தனை இஸ்லாமியக் கட்சிகளுடனும் நட்பாக நடித்தார், அந்திப்பொழுதில் ஜே.வி.பி. யுடன் பேச்சுவார்த்தை நடாத்தினார், அர்த்த இராத்திரியில் ஹெல உறுமயவுடன் உரையாடினார், காலையில் மேல் மாகாணக் கட்சிகளையும் மாலையில் மலையகக் கட்சிகளையும் கண்டு கண்டு கனிவாகப் பேசினார். யாரையும் எதிர்க்காமல் கதிரையில் குறிவைத்து காய் நகர்க்கினார் சங்கிரிகா. அம்மையாரின் வாண வெடிகளைக் கடைவிரித்து கதிர்காமரின் துணையுடன் ஏலம் கூவினர்.

### கனாக் கண்ட ஜே.வி.பி.

எப்படியும் ஆட்சியிலேறிவிடக் கனவுகண்ட மூன்றாம் நிலைக் கட்சியான ஜே.வி.பி., சந்திரிகா கடையில் சரக்கு வாங்கினர். விளைவு, தேர்தல் அழைப்பு, தற்போதைய நிலை என்ன?

நினைத்ததை சாதித்தார் சந்திரிகா. ஆனால் இப்போது மீண்டும் 1994இல் வந்து நின்றார். இப்போது மீண்டும் சர்வதேசத்தை தன்வசம் பாச மழை பொழிய வைப்பது, பாரதத்தை நேசத்துடன் முத்தமிடுவது, தமிழினத்திற்கு சமாதானம் தருகிற ஒரே சக்தியாகத் தன்னைக் காட்டிக் கொள்வது, அதேவேளை, சிங்கள இனவாதிகளை தனது சமாதான முழக்கத்தை எதிர்க்கும் சக்திகளாக உருவாக்குவது. இவையே முக்கிய நோக்கங்களாகும்.

புலிகளுடன் மட்டும் பேச்சு என்று கோசமிட்டு பாரதத்தை சீண்டி விடுவது, வடக்கு-கிழக்கு இணைந்த தன்னாட்சித் தீர்வு பற்றிப் பேசலாம் என்ற தோரணையில் ஜே.வி.பி. போன்ற கட்சிகளை இனவாதம் பேசவைத்து அதன்மூலம் தமிழ் இஸ்லாமியக் கட்சிகளுடன் கருத்து மோதல்களை உருவாக்குவது, இதன் மூலம் தான் ஒரு சமாதான விரும்பியாக இருந்தாலும் சிங்கள மக்களின் உரிமைகளைக் காக்க மீண்டும் விடுதலைப் புலிகளுக் கெதிராகப் போர் புரியும் நிலைப்பாட்டை எடுத்துள்ளதாக நியாயப் படுத்து வது, இப்படி மீண்டும் போர் மூள்வதற்குக்கூட விடுத லைப் புலிகள் முதற்கல்லை எறியும் நிலைக்கு அவர் களை அடிக்கடி சீண்டிக் கொண்டிருப்பது என்று மீண்டும் 94ற்குள் அம்மையார் முழுமையாக நுழைந்துள்ளார்.

தலைவிதியைத் தீர்மானிக்கவுள்ள மூன்றாம் நிலைக் காரணிகள் இலகுவாகச் சொல்வதென்றால், சந்திரிகா தனது காய்நகர்த்தலில் வெற்றிகளை மட்டுமே கண்டு வருகிறார். அவரது எந்தவொரு அசைவும் இதுவரை அவருக்கெதிராகப் போய் விட்டதாக அவர் நினைக்கவில்லை, ஆமாம் அவர் நினைக்கவில்லை, ஆனாலும் அவருக்கே தெரியா மல் இப்போது மூன்றாம் நிலைக் காரணிகள் பல மடமாகத் தலை தூக்கியுள்ளன. இவை தான் இனி இலங்கையின் தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்திகளாகவும் உருவாகப் போகின்றன.

தெரிந்தோ தெரியாமலோ ஆயுதமேந்திப் போராடிய மார்க்சிசக் கொள்கை கொண்ட ஜே.வி.பி.யுடன் இணைந்து ஆட்சியமைத்தது- 10 வருடங்கள் பழையதாய்ப் போன அதே ஏமாற்றுக் கதையை, மீண்டும் புதியது போல சர்வதேச நாடுகளிடம் விற்க முற்படுவது அப்போதைய நண்பர்களான தாய்மாமனும் கதிர் ாமரும் இன்னும் சிலரும் தற்போது தங்கள் தலை யெழுத் தைப் புரிய ஆரம்பித்திருப்பது. விடுதலைப் புலிகள் தலைமையின் விவேகமான காய் நகர்த்தல்கள- எப்படியும் போரை விடுதலைப் புலிகள் ஆரம் பிப்பதற்கான சூழ்ச்சிகளை சந்திரிகா செய்ய ஆரம் பித்திருந்தாலும், போருக்கான எந்த சமிக்ஞையும் காட்டாது விழிப்போடு இருப்பது - இடைக்கால தன்னாட்சி அலகை, சமாதான முயற்சியின் முதற்கட்டமாக விடுதலைப் புலிகள் அறிவித்திருப் பது - அரசுடனான எந்தவொரு தொடர்பையும் சர்வதேச காரணிகள் மூலம் மட்டுமே மேற்கொள்வது.

### எல்லாமே பாதகம்

தலைவர் சர்வதேச அரங்கை தொடர்ச்சியான தொடர்பில் வைத்திருப்பது - அன்ரன் பாலசிங்கத்தை நேரடியாகக் கிளிநொச்சிக்கு அழைத்திருப்பதன் மூலம், இறுதி முடிவு என்ன எடுப்பது என்று தலைவர் யோசிப்பதை நாசூக்காக வெளிக்காட்டியிருப்பது - சர்வதேச நாடுகளின் தொடர்ச்சியான அழுத்தங்கள் - பாரதத்தில் சடுதியாக ஏற்பட்ட ஆட்சி மாற்றம், தமிழ்நாட்டில் ஜெயலலிதாவின் தடுமாற்றங்களும் தளம்பல்களும் என்று இன்னோரன்ன அனைத்து மூன்றாம் நிலைக் காரணிகளும் அம்மையாருக்கு சாதகமாக செயற்பட மறுக்கின்றன. இதற்கிடையில் 2006 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் வருகிறது. அம்மையார் மூன்றாவது தடவை அந்தப் பதவிக்காகப் போட்டியிட வாய்ப்பில்லை. அதனால் ஜனாதிபதி ஆட்சியை 2005 ஆரம்பத்திற்குள்ளாக மாற்றிவிட வேண்டும், அப்போதுதான் 2005ன் இறுதிக்குள் தானே பிரதம மந்திரி ஆசனத்தைக் கைப்பற்ற வியூகமமைக்க கால அவகாசம் கிடைக்கும்.

இப்போது பார்த்து 4.5 பில்லியனை வைத்துக் கொண்டு இந்த வெளிநாடுகள் ஏய்க்கப் பார்க்கின்றன, சரி அதைக் கொஞ்சம் கவனிப்போம் என்றால் இங்கே வீரவன்ச கட்டுக் கட்டாய் கடிதம் எழுதுறார். புதுசாப் போட்ட தனபால வேறு கதிர்காமரை அடக்கி வை என்று மிரட்டுறார். முகாமுக்குள் இருக்கிறவர்களை, கவனமாக செய்யுங்கள் என்றால், அவர்கள் அங்கே-இங்கே சுட்டுப்போட்டு வழிமாறி முகாமுக்குள்ளேயே வந்து தொலைச்சு என் அடிவயித்தில கொள்ளி வைக்கிறார்கள்.

இங்காலை கருணாநிதி வேற சிங்கின்ர குடும்பியை பிடிச்சுத் தள்ளுறார். இவற்றையெல்லாம் சரிப் பண்ணலாம் எண்டு வெளிக்கிட்டால், நாம கிளிநொச்சிய விட்டு வரமாட்டம், இடைக்காலம் தா! எண்டு சின்னப் பயல் தமிழ்ச்செல்வன் மிரட்டுறார், அவரைக் கெதியாத் தாக்காட்டாட்டி பெரியவர் என்ன புதுசாக் கேட்பாரோ எண்டு நினைக்க இப்பவே காய்ச்சல் வருற மாதிரிக் கிடக்குது!!

கந்தா கதிர்வேலா, ஞானப் பண்டிதா, புத்தா, பாபா தேவனே, மாதாவே இவன்கள் எல்லாரும் போய் ஒழிச்சிட்டான்கள்.

# சோனியாவுக்குப் புதிய பதவி

(புதுடில்லி)

மத்தியில் அமைந்துள்ள காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி



அரசின் பொதுவான, குறைந்த பட்சத்திட்டத்தைக் கண்காணிக்கும் தேசிய ஆலோசனைக் குழுத் தலைவராக காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த அறிவிப்பை மத்திய அமைச்சரவைச் செயலகம் வெளியிட்டுள்ளதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

சோனியாகாந்திக்கு கபினட் அமைச்சரவை அந்தஸ்தும் தனி அலுவலகமும் வழங்கப்படும்.

அவரது தலைமையிலான இந்த தேசிய ஆலோசனைக் குழுவில் அரசு கூட்டணிக் கட்சிகளின் பிரதிநிதிகளும் இடம் பெறுவார்கள். (து)




நன்றி :- தினமலர்

## தமிழகத்தில் சனீஸ்வரன் கோவிலுக்கு 60 ஆண்டுகளின் பின் கும்பாபிஷேகம்

(திண்டுக்கல்)

தமிழகத்திலேயே அருள்மிகு சனீஸ்வர பகவானுக்கு தனிக் கோயிலாக உள்ள திண்டுக்கல் மலையடிவாரம் சனீஸ்வர பகவான் ஆலய கும்பாபிஷேகம் 60 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சுமார் 60 ஆண்டுகளுக்குப் பிறகு இத் திருக்கோயில் திருப்பணிகள் நடத்தப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை கும்பாபிஷேகம் நடைபெற்றது. (து)



முன்னாள் துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவர்கள் கடந்த வியாழக் கிழமை நாடாளுமன்றத்தில் இருந்து குடியரசுத் தலைவர் மாளிகைக்கு ஊர்வலமாகச் சென்றனர்.

# சபாநாயகராகச் சோமநாத் சட்டர்ஜி பதவியேற்பு எதிர்க்கட்சித் தலைவர்களின் ஏகோபித்த பாராட்டு

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும் மக்களவை உறுப்பினருமான சோமநாத் சட்டர்ஜி மக்களவை சபாநாயகராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் மக்களவைக கூட்டம் ஆரம்பமானதும் சோமநாத் சட்டர்ஜியைச் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்க காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி, முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் மற்றும் பல கட்சிகளின் தலைவர்கள் தீர்மானங்களை முன்மொழிந்தார்கள்.

இதைச் சம்பந்தப்பட்ட கட்சி உறுப்பினர்கள் வழிமொழிந்தார்கள். இதனையடுத்து குரல் வாக்கெடுப்பின் மூலம் மக்களவைச் சபாநாயகராகச் சோமநாத் சட்டர்ஜி தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தற்காலிக அவைத் தலைவர் அறிவித்தார்.

சேமநாத் சட்டர்ஜி மக்களவைச் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதும் பிரதமர் மன்மோகன் சிங், அவை முன்னவர் பிரணாப் முகர்ஜி, எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே.அத்வானி முதலியோர் மக்களவை மரபின்படி சோமநாத் சட்டர்ஜியை சபாநாயகரின் இருக்கைக்கு அழைத்துச் சென்றார்கள்.

பின்னர், சோமநாத் சட்டர்ஜி சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதற்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் அவருக்குப் பாராட்டுத் தெரிவித்தார்கள்.

சோமநாத் சட்டர்ஜியைப் பாராட்டிப் பேசிய மன்மோகன் சிங், ஜனநாயகத்தை வழிப்படுத்தவும் சமுதாயத்தை மேம்படுத்தவும் மக்களவையைத் திறம்பட சோமநாத் சட்டர்ஜி நடத்துவார் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

நாடாளுமன்ற நடவடிக்கைகளில் அவருக்குள்ள பரந்த அனுபவம், அவையை ஜனநாயக முறையில் நடத்த உதவும் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

அவையில் நடைபெறும் விவாதங்களின் தன்மையை மேம்படுத்த ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி சபாநாயகருக்கு முழு ஆதரவு அளிக்குமென்று பிரதமர் கூறினார்.

டி.ஜி.மௌலங்கர், வித்தல் பாய் படேல் போன்ற தலை சிறந்த மக்களவைச் சபாநாயகர்கள் வரிசையில், நீங்கள் பிரகாசிப்பீர்கள் என்று அவை முன்னவர் பிரணாப் முகர்ஜி, சோமநாத் சட்டர்ஜிக்குப் புகழாரம் சூட்டினார்.

நாடாளுமன்ற நடவடிக்கைகளில் சோமநாத் சட்டர்ஜியின் திறமை அனைவராலும் பாராட்டப்பட்டதென காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி கூறினார்.

மதவாதக் கொள்கை அரசியலை நிராகரித்த மக்களின் தீர்ப்புத்தான் சட்டர்ஜியை இந்த உயர்ந்த பதவியில் அமர்த்தியுள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்த முக்கியமான பதவிக்கு ஆதரவாக எதிர்க்கட்சிகளும் மக்களவையில் தீர்மானங்களைக் கொண்டு வந்தது திருப்தியாக இருந்தது; இதற்காக மூத்த தலைவர் அடல்பிஹாரி வாஜ்பாய்க்குப் பாராட்டுத் தெரிவிக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி குறிப்பிட்டார்.

மக்களவையில் எதிர்க்கட்சிகளுக்கும் உரிய வாய்ப்பளிப்பதை புதிய மக்களவைச் சபாநாயகர் உறுதி செய்ய வேண்டுமென்றும் அவர் கூறினார்.

மக்களவை உறுப்பினர்கள் தங்கள் குறைகளைச் சொல்ல அவையின் மையப் பகுதிக்குச் செல்லாத வகையில், அவையை சோமநாத் சட்டர்ஜி திறம்பட நடத்துவாரென முன்னாள் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்தார்.

பாரபட்சமில்லாமல் அவையை வழி நடத்துவதற்கு உண்டான தேவை அதிகரித்திருப்பதாகக் குறிப்பிட்ட வாஜ்பாய், எப்படி நல்ல முறையில் தேர்தல் நடத்தப்பட்டது என்பதை மக்கள் உலகுக்குத் தெரிவித்துள்ளார்கள். மக்களவை உறுபபினர்களாகிய நாங்கள் உலகுக்கே ஒரு முன்னுதாரண மாகத் திகழ வேண்டுமென்று குறிப்பிட்டார்.

மக்களவைச் சபாநாயகராகத் தன்னை ஒரு மனதாகத் தேர்ந்தெடுத்ததற்கு ஆளும் கூட்டணிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் முதலில் நன்றி தெரிவித்துக் கொண்ட சோமநாத் சட்டர்ஜி, அவைத் தலைவர் பதவியிலிருக்கும் வரை கட்சிக கண்ணோட்டமின்றி அவையின் உரிமைகளைப் பாதுகாக்க முழு மூச்சுடன் பாடுபடுவேன் என்று உறுதியளித்தார்.

இந்த உயர்ந்த பதவியின் கண்ணியத்தையும் கௌரவத்தையும் பாதுகாக்க அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

வளர்ந்து வரும் வேலையின்மை, வறுமை, கல்லாமை போன்ற அவலங்களுக்கு ஆளாகியுள்ள மக்களின விருப்பங்களை பூர்த்தி செய்வதாக அவை உறுப்பினர்கள் தங்கள் நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ளவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (து)

# அயோத்திப் பிரச்சினையில் அத்வானி மீது வழக்கு

## மக்களவையில் குற்றச்சாட்டு

மக்களவைச் சபாநாயகர் தேர்தல் முடிந்ததும் அமைச்சர்களை அவையினருக்கு அறிமுகம் செய்யுமாறு பிரதமரை சோமநாத் சட்டர்ஜி கேட்டுக் கொண்டார்.

பிரதமர் மன்மோகன் சிங் அமைச்சர்களை அவையினருக்கு அறிமுகம் செய்யத்துவங்கினார்.

இந்தச் சமயம் எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே.அத்வானி தம்மைப் பேச அனுமதிக்குமாறு கோரினார்.

அமைச்சர்களை நியமிப்பது பிரதமரின் பிரத்தியேக உரிமையென்றாலும், பிரதமர் மன்மோகன் சிங் மிகவும் தூய்மையானவரென்றாலும் குற்றச்சாட்டுக்குள்ளாவர்களை அமைச்சர்களாக நியமித்திருக்கும் முதல் பிரதமர் இவர்தான் என்று குற்றஞ்சாட்டினார்.

அவருக்கு ஆதரவாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் அவையின் மையப்பகுதிக்கு வந்து கோஷமிட்டார்கள்.

அவரது இந்தக் குற்றச்சாட்டுக்கு ஆளும் கூட்டணி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

அயோத்திப் பிரச்சினையில் அத்வானி மீது வழக்கு இருக்கிறது என்று குறிப்பிட்டு அதற்கு ஆதாரமாகத் தமது கையிலிருந்த காகிதங்களை அவர்கள் தூக்கிக் காட்டினார்கள்.

இதன் காரணமாக அரைமணி நேரம் அவையில் அமளி நிலவியது.

அமைச்சர்களை நியமிப்பது பிரதமரின் பிரத்தியேக உரிமையென்பதால், நிகழ்சிநிரல்படி நடவடிக்கையைத் தொடரலாமென பிரதமரைச் சபாநாயகர் கேட்டுக் கொண்டார். அதன்படி அமைச்சர்களை மன்மோகன் சிங் அறிமுகம் செய்தார். (து)

**இந்தியச் செய்திகள்**

# மக்கள் தீர்ப்பை ஏற்று ஜெயலலிதா பதவிவிலகவேண்டும்

## சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் கோரிக்கை

மக்களவைத் தேர்தலில் மக்களின் தீர்ப்பை ஏற்றுக் கொண்டு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பதவி விலக வேண்மெனத் தமிழக சட்டமன்றக் காங்கிரஸ் தலைவர் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர் மாநிலத்திலுள்ள 234 தொகுதிகளில் 233 தொகுதிகளுக்கு உட்பட்ட பகுதியில் மக்கள் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியை நிராகரித்திருப்பதாகக் கூறினார்.

இதற்குத் தார்மீகப் பொறுப் பேற்ற ஜெயலலிதா பதவிவிலக வேண்டுமென்றார் அவர்,

ஆனால் தமிழக அரசைப் பதவியிலிருந்து நீக்க காங்கிரஸ் கட்சி கோரவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

பறிக்கப்பட்ட பல்வேறு சலுகைகளை மீண்டும் அளிப்பது, அமைச்சரவை மாற்றத்துக்கோ அல்லது சட்ட மன்றத்துக்குப் புதிதாகத் தேர்தல் நடத்துவதற்கோ உண்டான அறிகுறி என்று பாலசுப்பிரமணியம் கூறினார்.

இப்பொழுது ஜெயலலிதா செய்வதெல்லாம் முதலமைச்சருடைய ஒப்புதல் வாக்கு மூலம் தான். என்னென்ன தவறுகள் செய்தேன், என்னென்ன குற்றங்களைச் செய்தேன் என்பதற்கான ஒப்புதல் வாக்குமூலம். இது மக்கள் அளித்த தீர்ப்புக்குப் பின் அளிக்கப்படும் ஒப்புதல் வாக்கு மூலம். தீர்ப்புக்குப் பிறகு தண்டனை அனுபவிப்பது தான் முறை. அந்தத் தண்டனை அவர் பதவியை விட்டு விலகுவது தான் என்றார் அவர்.

தமிழக அரசு வேலையில்லாதவர்களுக்கு மாதந்தோறும் வழங்கி வந்த உதவித் தொகையை ஆயிரம் ரூபாவாக உயர்த்தி மீண்டும் வழங்கவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார். (து)



தெலுங்குப் பட தயாரிப்பாளரைத் துப்பாக்கியால் சுட்ட என்.டி.ராமராவின் மகனும், நடிகருமான பாலகிருஷ்ணா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவருகிறார். அவரைப் பார்த்து வீட்டு வெளியே வந்த சகநடிகரும் இயக்குனருமான முரளி மோகன் நிருபர்களுக்கு பேட்டியளித்த போது எடுத்த படம்.

# கடவுளின் திருவுளம் பற்றிய அறிவை நாம் நிறைவாக அடைய வேண்டும்

நாம் தூயோராகவும், மாசற்றோராகவும் தம் திருமுன் விளங்கும்படி உலகம் தோன்றுவதற்கு



முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார். (எபே 1:4) இயேசுகிறிஸ்து மூலமாக நாம் அன்பினால் முன் குறித்து வைக்கப்பட்டுள்ளோம். நாம் மீட்கப்பட்டுள்ளது கடவுளாலே.

நாம் இன்னும் மனிதர்களுக்கு உகந்தவர்களாக இருக்கப் பார்த்தால் கிறிஸ்துவுக்குப் பணியாளனாய் இருக்கமுடியாது. "ஆண்டவருக்காக நீங்கள் உழைப்பது வீண் போகாது என்பதை அறிந்து ஆண்டவரின் பணியை இன்னும் அதிகமாக எப்போதும் செய்யுங்கள்" (1கொரி 15:58).

எனவே எமக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தியில் உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்காவிட்டால் அதன் வழியாக மீட்பு அடைய முடியாது என்பது புனித பவுலின் கருத்தாகும்.

### ஆவிக்குரிய வாழ்வு

நற்செய்தியைக் கூறும் ஒவ்வொருவருக்குமல்ல மாறாக "நற்செய்தியை நம்பும் ஒவ்வொருவருக்கும் மீட்பு உண்டு. ஏனெனில் நேர்மையுடையோர் தம் நம்பிக்கையால் வாழ்வடைவர்" (உரோ 1:16,17).

## பரமபிதா காட்டிய பாதை

செயலில்லாத உபதேசம் செத்தது. அது வல்லமையற்றது. "கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின் அவரோடு வாழ்வோம் என்பதே நம் விசுவாசம்" (உரோ 6 : 8) நாம் ஒவ்வொருவரும் "முழு ஞானத்தையும், ஆவிக்குரிய அறிவுத் திறனையும் பெற்று கடவுளின் திருவுளத்தைப் பற்றிய அறிவை நிறைவாக அடைய வேண்டும் (சௌலோ 1:9).

பணப் பெருமைக்கும் அதிகாரத்துக்கு இடமளிக்கக் கூடாது ஒவ்வொருவரையும் மனிதனாக ஏற்றுக் கொள்ளவேண்டும். நமக்கு வேண்டியவர் என்பதற்காக அவருக்குச் சலுகையும் வேண்டாதவர்களுக்கு பாராபட்சமும் காட்டக் கூடாது அதனால் கடவுளின் தண்டனைக்கு அளாக நேரிடலாம்.

### உயிர்ப்புள்ள வாழ்வு

ஞானமும் அறிவு மாகிய செல்வங்கள் அனைத்தும் கிறிஸ்துவில் மறைந்துள்ளன "போலி மெய்யியலாலும் வீணான ஏமாற்றுப் பேச்சாலும், உங்களை யாரும் கவர்ந்து கொள்ள விடாதீர்கள்" "நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள்" (சௌலோ 3 : 1).

கிறிஸ்தவர்களுக்கு எல்லோரும் சகோதரர்களே ஆளுக் கொரு நீதி வழங்காதீர்கள். ஏழைப் பெண்கள் எதனையோபேர் வாழ்வின்றி இருக்க பணக்காரப் பெண்களை பணிவிடைக்காரர்களாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். "உண்மையைப் பற்றிக் கொண்டு வாழாது தீமையில் இன்பங்காணும் அனைவரும் தீர்ப்புக்கு உள்ளாவர். (2 தெச 1:12).

### தூய்மையும் தாழ்மையும்

"சோதனையை மனவுறுதியுடன் தாங்குவோர் பேறு பெற்றோர். ஏனெனில் அவர்களது தகுதி மெய்ப்பிக்கப்படும் போது, தம் மீது அன்பு கொள்வோருக்கு கடவுள் வாக்களித்த வாழ்வாகிய வெற்றி வாகையினை அவர்கள் பெறுவார்கள்" (யாக்கோபு 1:12) "உங்

**அமல அருள்தாசன்**

களை அழைத்தவர் தூய்மையுள்ளவராய் இருப்பது போல, நீங்களும் உங்கள் நடத்தையிலெல்லாம் தூய்மையுள்ளவர்களாய் இருங்கள்" (1 பேதிரு 1:15) "ஆனால் பாவம் நம்மிடம் இல்லை என்போமென்றால் நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்வோம் உண்மை நம்மிடம் இராது" (1 யோவான் 1:8) உண்மைக்கு சாட்சி சொல்லவே இவ்வுலகிற்கு வந்தேன் என்றார் இயேசு பெருமான் உண்மைக்காக சிரம் கொய்யப்பட்டார் திருமுழுக்கு யோவான். உண்மைக்காக உயிர்துறந்தவர்கள் புனிதர்கள். உண்மையை வாழ்வாக்க, உண்மையை பணியாக்க உண்மையைச் சான்றாக்க இயேசுவின் பின்னால் அடியெடுத்து வைப்போம். □

## காணாமல் போன துப்பாக்கி மீட்பு

ஓமந்தை இராணுவ முகாமிலிருந்து காணாமல் போன ரி 56 ரகத்துப்பாக்கி அநுராதபுரத்தில் வைத்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இராணுவ வீரர் ஒருவரும் அவரது நண்பர் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியாப் பொலிஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச)

## மண்திட்டி சரிந்ததில் ஒருவர் பலி

(இரத்தினபுரி)

தெனிகத்தேன நகரில் மண்திட்டி சரிந்ததில் ஒருவர் பலியாகியிருப்பதுடன் அப்பகுதியில் இருந்த வர்த்தக நிலையங்களும் தேசமடைந்துள்ளன.

மேற்படி பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் தங்கியிருந்த ஒருவரே இச்சம்பவத்தில் பலியாகியிருப்பதாக தெரியவருகின்றது. இச்சம்பவத்தினால் ஏற்பட்ட சேதவிபரங்களை உடன் அறியத் தருமாறு அம்பகமுவ பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இதேவேளை தற்பொழுதுள்ள சீரற்ற கால நிலைகாரணமாக இரத்தினபுரியிலும் மண்சரிவுகள் ஏற்படும் அபாயம் தோன்றியிருப்பதாகத் தெரியவருகிறது.

எனினும், இரத்தினபுரியில் மண்சரிவு ஏற்பட்டால் அதுகுறித்து உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள தாம் தயாராக இருப்பதாக இரத்தினபுரி மாவட்ட அரச அதிபர் மாலினி பிரேமரட்ண தெரிவித்துள்ளார். (உ-4,61)

# 1999 ஆம் ஆண்டின் பின் சுமார் 2 இலட்சம் வெடி பொருட்கள் வன்னியில் மீட்டு அழிக்கப்பட்டன

(வவுனியா)

1999 ஆம் ஆண்டின் பின்னர், வன்னியில் மனித நேய கண்ணி வெடி அகற்றும் பிரிவினரால் ஒரு இலட்சத்து 84 ஆயிரத்து 305 வெடி பொருட்கள் மீட்டு அழிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் தாயகப்பிரதேசங்களை ஆக்கிரமித்த இராணுவத்தினால் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடி பொருட்கள் என்பவற்றை அகற்றும் நடவடிக்கைகளை வன்னியின் பல பாகங்களிலும் மேற்கொண்டு வரும் இப் பிரிவினரால் கடந்த 1999 ஆம் ஆண்டு முதல் கடந்த மே மாதம் 20 ஆம் திகதி வரையில் 98 ஆயிரத்து 110 மிதி வெடிகளும் 104 வாகன கண்ணி வெடிகளும் 86 ஆயிரத்து 91 வெடிக்கும் நிலையில் உள்ள வெடி பொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாக மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரது புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், இப்பிரிவினர் தற்பொழுதும் படையினரிடம் இருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களை வெடி பொருள் அபாயமற்ற பிரதேசமாக மற்றும் முயற்சியில் துரிதமாக ஈடுபட்டும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-4,64)

## கேதீஸ்வர ஆலயச் சூழலில் மீளக் குடியமர அனுமதி

(மன்னார்)

யுத்தம் காரணமாக திருக்கேதீஸ்வர ஆலயச் சூழலில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் அப்பகுதிகளில் மீளக் குடியமர்த்தப்பட்டு வருகின்றன.

நீண்டகாலமாக இராணுவத்தினரது பிடியில் இருந்து மேற்படி பிரதேசத்தில் அரசு - புலிகளுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் பாதுகாப்பு கெடுபிடிகள் குறைவடைத்திருந்த போதும், அப்பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு இராணுவம் அனுமதி வழங்கவில்லை.

மன்னார் மாவட்ட அரச அதிபர் மற்றும் கேதீஸ்வர ஆலய அறங்காவற் சபையினர் ஆகியோரது தொடர்சசியான வேண்டுகோளுக்கு இணங்க அப் பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்ந்துவதற்கான அனுமதியை அண்மையில் படையினர் வழங்கியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இப் பகுதிகளில் 20 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

இதேவேளை, 1990 ஆம் ஆண்டில் படையினர் ஆக்கிரமிக்க முன்னர் 250ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இப்பகுதிகளில் வாழ்ந்து வந்தன என்பதுவும் குறிப்பிடத் தக்கது. (உ-4,61)

# கழிவுப் பொலித்தீன்களைக் கொள்வனவு செய்ய மையங்கள்

## சுற்றாடல் அதிகாரசபை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

சூழலை மாசு படுத்தும் பொலித்தீன்களைச் சேகரிப்பதற்கான புதிய திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த சுற்றாடல் அதிகார சபை தீர்மானித்துள்ளது.

இதற்காக நாட்டில் உள்ள சகலபாகங்களிலும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

அத்துடன், பொலித்தீன் வகைகளை மீள் உற்பத்திக்கு பயன்படுத்தும் விதத்தில் கழிவு பொலித்தீன்களை மக்களிடம் இருந்து கொளவனவு செய்யவும் சுற்றாடல் அதிகார சபை தீர்மானித்துள்ளது.

மக்களிடம் இருந்து விலை கொடுத்து கழிவு பொலித்தீன்களை கொள்வனவு செய்வதற்காக நாட்டின் சகல பாகங்களிலும் கொள்வனவு மையங்கள் நிறுவப் படவுள்ளன.

அத்துடன், உக்கிப் போகக் கூடிய பொலித்தீன்வகைகளை அறிமுகப்படுத்தவும் சுற்றாடல் அதிகாரசபை தீர்மானித்திருப்பதாக அதன் தலைவர் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் சுற்றாடலை பாதிக்கும் பொலித்தீன் பாவனைகள் மட்டுப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-4,61)

## கீதம் இசைத்தல் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மத்திய சுற்றாடல் அதிகார சபை பிராந்திய தலைமை அலுவலகம் நடத்திய மாவட்ட மட்ட கீதம் இசைத்தல் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

முதலாம் இடம் :- யாழ். இந்துக் கல்லூரி.

இரண்டாம் இடம் :- பரு.வேலாயுதம் ம.வி.

மூன்றாம் இடம் :- பரு மெதடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலை. (உ-19)

# அமெரிக்காவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

(கொழும்பு)

அமெரிக்காவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை யொன்றைச் செய்து கொள்ளுவதற்காக உயர் அரசாங்க அதிகாரிகள் மற்றும் தனியார் துறை வர்த்தகப் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக்குழுவொன்று விரைவில் அமெரிக்கா செல்லவுள்ளது.

அமெரிக்க அரசாங்க அதிகாரிகளையும் காங்கிரஸ் மற்றும் தனியார் வர்த்தகத்துறை அதிகாரிகளையும் சந்திக்கவுள்ள இந்தத் தூதுக்குழுவினர், இவ் வருட முடிவில் அமெரிக்காவுடனான பல்வகை தும்பு உற்பத்தி உடன்படிக்கை காலாவதியானதும் ஏற்படவிருக்கும் தாக்கம் பற்றி விளக்கிக் கூறவுள்ளனர்.

வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தலைமையில் அமெரிக்கா செல்லவுள்ள இந்தத் தூதுக்குழுவில் வர்தகப் பணிப்பாளர் கே.ஜே.வீரசிங்க மற்றும் இலங்கைப புடவைக் கைத்தொழில் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, இலங்கைக்கு வருமானத்தை பெற்றுத்தரும் புடவைக் கைத்தொழில் உற்பத்திகளுக்கு அமெரிக்காவில் அதிக சந்தைவாய்ப்புக்கிடைப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-60,10)

# தெற்காசிய சுதந்திர வர்த்தகம் சார்க் நாடுகளின் ஏகோபித்த கருத்தைப் பெற 3நாள் மாநாடு

(கொழும்பு)

தெற்காசிய சுதந்திர வர்த்தகப் பிரதேசம் சம்பந்தமாக ஏகோபித்த கருத்தைப் பெற்றுக் கொள்ளும் வகையில் சார்க் நாடுகளைச் சேர்ந்த சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளும் நிபுணர்களும் இணைந்து இன்று கொழும்பில் மாநாடு ஒன்றை ஆரம்பிக்கவுள்ளனர்.

3 நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இந்த மாநாட்டில், சார்க் நாடுகள் ஒவ்வொன்றும் சுதந்திர வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான தத்தமது பிரோரனைகளை சமர்ப்பிக்கவுள்ளன.

அத்துடன், சம்பந்தமான சட்டங்களையும் பிரமாணங்களையும் தயாரிப்பது குறித்தும் இம் மாநாட்டில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

சப்தா ஒப்பந்தத்தில் சார்க் நாடுகள் அனைத்தும் இஸ்லாமபாத்தில் சென்ற ஜனவரிமாதம் கைச்சாத்திட்டிருந்தன.

2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி நடைமுறைக்கு வரவுள்ள இவ் ஒப்பந்தம் 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் முழு அளவில் அமுலில் இருக்கும் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, கொழும்பில் இன்று ஆரம்பமாகவுள்ள மாநாட்டில் தெற்காசிய சுதந்திர வர்த்தகப் பிரதேசம் சம்பந்தமான தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப் படாவிட்டால் அது பற்றி எதிர் வரும் ஒகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி பூட்டானில் திம்பு நகரில் நடை பெறவுள்ள 4 ஆவது கூட்டத்தில் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-60,10)

# பாக்.ஏவுகணைப் பரிசோதனை முயற்சி முழுமையான வெற்றி

(இஸ்லாமபாத்)

இந்தியாவின் பெரும்பாலான நகரங்களைத் தாக்கும் திறன் வாய்ந்த உள்நாட்டுத் தயாரிப்பான 'காவ்ரி' ஏவுகணையை பாகிஸ்தான் நேற்று முன்தினம் இரண்டாவது முறையாக் பரிசோதித்தது.



பாகிஸ்தானின் உள்நாட்டுத் தயாரிப்பு ஏவுகணையான 'காவ்ரி' கடந்த மாதம் 29 ஆம் திகதி வெற்றிகரமாக பரிசோதிதுப் பார்க்கப்பட்டது. இந் நிலையில், இந்த ஏவுகணை மீண்டும் நேற்று முன்தினம் அந் நாட்டு அதிபர் பர்வேஸ் முஷாரப் முனனிலையில் பரிசோதித்துப் பார்க்கப் பட்டது.


இந்த ஏவுகணை ஆயிரத்து 500 கி.மீற்றர் தூரம் பாய்ந்து சென்று தாக்கும் திறன் கொண்டது. இந்தியா வின் பெரும்பாலான நகரங்களைத் தாக்கும் திறன் படைத்தது.

இம்மாத இறுதியில் இந்தியா, பாகிஸ்தான் இடையே அமைதிப் பேச்சுவார்த்தை நடக்கவிருக்கிறது. திகதி அறிவிப்புக்குப் பின்னர் இரண்டாவது முறையாக'காவ்ரி' ஏவுகணை பரிசோதனை நடததப் பட்டிருப்பது வியப்பை அளித்துள்ளது. ஆனால் இந்தப் பரிசோதனை ஏவுகணைத் தரத்தை சரிபார்த்துக் கொள்ள மட்டும் தான் என்று வெளியுறவுத் தறை அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஏவுகணைப் பரிசோதனை மற்ற நாட்டினருக்கு அரசியல் சமிக்ஞைகள் அனுப்புவதற்காக அல்ல என்றுஅதிபர் முஷாரப் கூறியதாக இராணுவச் செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் ஷவ்கத் சுல்தான் கூறியுள்ளார்.

நாட்டிற்கு வெளியே அரசியல் சமிக்ஞைகள் அனுப்புவதற்காக இப் பரிசோதனை நடத்தப்படவில்லை ஏவுகணை தொழில்நுட்பத் தரத்தை சரிபார்க்கத்தான் இந்தப் பரிசோதனை என்று அதிபர் தெளிவுபடுத்தியுள்ளார். தொடர்ந்து ஏவுகணைப் பரிசோதனை நடத்தப்படும். இதில் சமரசம் என்ற பேச்சுக்கோ அல்லது திரும்பப் பெறுதல்என்ற பேச்சுக்கோ இடமில்லை என்று அதிபர் கூறியுள்ளார்.

தேவையான தூர இலக்கை அடைவதற்காக மீண்டும் ஏவுகணை பரிசோதனை நடத்தப்பட்டது. இதில் நூறு சத வீதம்வெற்றி கிடைத்துள்ளது என்று இராணுவச் செய்தித் தொடர்பாளர் மேலும் கூறியுள்ளார். (உ)



அமெரிக்காவைச் சேர்ந்த கோடீஸ்வரர் பால் ஆலனின் நிதி உதவியுடன் விமான வடிவமைப்பாளர் பர்ட் ரூதன் என்பவர் 'ஸ்பேஸ்ஷிப் ஒன் ' என் ற ரொக்கெட்டை உருவாக்கியுள்ளார். பூமியின் வளிமண்டலத தைத தாண்டிச் செல்லும் முயற்சியில் இவ் விண்கலம் .

# பேனா துப்பாக்கிகள் வைத்திருந்த ரஷ்யப் பெண் ஸ்பெயினில் கைது

(மட்ரிட்)

ஸ்பெயின் நாட்டில் சட்ட விரோதமாக பேனா துப்பாக்கிகள் வைத்திருந்த ரஷ்ய நாட்டு பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் .

ரஷ்யாவில் இருந்து பலர் ஸ்பெயின் நாட்டு வழியாக சட்ட விரோதமாக துப்பாக்கிகளை கடத்துவது அதிகரித்து வருகிறது. இதனைத தடுக்க ஸ்பெயின் பொலிஸார் தீவிர சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், தலைநகர் மட்ரிட்டில் நேற்று முன்தினம் பொலிஸார் நடத்திய சோதனையில் சந்தேகத்திற்கு இடமான வகையில் இருந்த ரஷ்ய பெண் ஒருவரை பிடித்து விசாரித்தனர்.பேனாவைப் போன்ற அளவு மற்றும் வடிவில் அமைந்திருந்த 38சிறிய துப்பாக்கிகளை அவர் மறைந்துவைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அந்தப் பேனா துப்பாக்கிகள வெள்ளியால் தயாரிக்கப்பட்டிருந்தன. இதையடுத்து சட்ட விரோதமாக அந்தத் துப்பாக்கிகளை வைத்தருந்ததாக அந்தப் பெண் கைது செய்யப்பட்டார்.

அந்தப் பேனா அளவு துப்பாக்கிகளை நாங்கள் இதற்கு முன் பார்த்ததே இல்லை.அந்தப்பெண் ரஷ்யாவை சேர்ந்த துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் கடத்தும் கும்பலைச் சேர்ந்தவர் என்று தெரிய வருகிறது என ஸ்பெயின் பொலிஸார் தெரிவித்தனர். (உ)

# ஈராக்கில் இடைக்கால அரசு ஆதரவு தேடுகிறார் அமெ.அதிபர்

ஈாக்கில் இம்மாத இறுதியில் அமையவுள்ள இடைக்கால அரசுக்கு சாவதேச நாடுகள் முழு ஒத் துழைப்பு வழங்க வேண்டும் என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈராக்கில் அமெரிக்கக் கூட்டணிப் படைகளின் தாக்குதலினால் சதாம் ஆட்சி வீழ்த்தப்பட்டது. அதன் பிறகு அமெரிக்க அதிகாரி போல்ப்ரீமா தலைமையில் இடைக்கால நிர்வாகம் நடந்து வருகிறது. ஐ.நா. சபையின் ஒப்புதலோடு இந்த மாத இறுதியில் உளளூர் மக்களிடம் ஆட்சியை ஒப்படைக்க அமெரிக்கக் கூட்டணிப் படைகள் முடிவு செய்துள்ளன.

புதிய அதிபராக யாவரும், பிரதமராக அலாவியும் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.இவர்களிடம் ஈராக்கின் ஆட்சி அதிகாரம் ஒப்படைக்கப் படவுள்ளது. ஈராக்கின் புதிய ஆட்சியாளர்களிடம் நிர்வாகத்தை ஒப்படைத் தபின் அமெரிக்கக் கூட்டணிப் படைகள்ஈராக்கை விட்டு வெளியேற வேண்டும் என சீனா,ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் கோரியுள்ளன.

அமெரிக்க அதிபர் புஷ் நேற்று முன்தினம் இதுபற்றிக் கூறுகையில்,

ஈராக்கில் இடைக்கால அரசு அமைவதற்கு சர்வதேச நாடுகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். அலாவி தலைமையில் அமையும் இடைக்கால




அரசு ஆறுமாத காலத்தில் பொதுத் தேர்தலை நடத்த தயாராக வேண்டும். இதற்கு ஈராக்கில் பாதுகாப்பு நிலைமை மேம்பட வேண்டும் . எனவே அமெரிக்கக் கூட்டணிப் படைகளின் ஒத்துழைப்புத் தேவை என்பதால்,இடைக்கால நிர்வாகத்தில் அமெரிக்காவின் பங்களிப்பு தேவை.ஈராக் சிறையில் நடந்த கொடுமைகளுக்குக் காரணமானவர்கள் மீது அமெரிக்கா உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்றார். (உ)

WORLD NEWS
உலக தரிசனம்

# சிரச்சேதம் செய்யப்பட்டதைக் கண்டித்து தாய்லாந்தில் கண்டனப் பேரணி

## ஆயிரக்கணக்கானோர் திரண்டனர்

(பாங்கொக்)

பௌத்த -முஸ்லிம் கலவரத் தின் போது,பௌத்தர் ஒருவர் சிரச் சேதம் செய்யப்பட்டமையைக் கண்டித்து தாய்லாந்தின் தென்பகுதியில் பௌத தர்கள் இணைந்து பேரணியொன்றை நடாத்தியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்த பௌத்த பேரணியில் ஆயிரக் கணக்கான பௌத்தர்கள் பங்கேற்றனர்.

தாய்லாந்தின் தென் பகுதியில் முஸ்லிம்களின் எண்ணிக்கை ஓங்கியுள்ள நிலையில் முஸ்லிம்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையில் அண்மையில் ஏற்பட்ட கலவரங்களால் 3 பௌத்தபிக்குகள் கொல்லப்பட்டனர்.

அத் துடன் ,பிரிவினைவாத முஸ்லிம் குழுவினர் மேற்கொண்ட தாக் குதலின் . போது பொலிஸ் மற் றும் இராணுவத் தினரின் தூப்பாகிச் சூட்டில் 108 முஸ்லிம் பிரிவினைவாதிகள் பலியாகியுள்ளனர். (உ)



ஹவாய் தீவில் உள்ள வால்கனோ எரிமலை தற்போது தீப்பிழம்பை கக்கி வருகிறது. எரிமலையில் இருந்து வெளிவரும் லாவா எனப்படும் தீப்பிழம்பு பசுபிக் கடலில் கலக்கும் காட்சி.

## விண்வெளிக்கு தனி நபர்கள செல்லலாம

(வாஷிங்டன்)

முதல் முறையாக தனிநபர் ஒருவா விண்வெளிக்கு ரொக்கட்டைச் செலுத் தவுள்ளார்.விண்வெளிப் பயண வரலாற் றில் தனி ஒருவர் விண்வெளிக்கு ரொக்கட்டைச் செலுத்துவது இதுவே முதல் தடவையாகும்.

விண்வெளியை தனிநபர்களுக்குத் திறந்து விடுவதற்கான முயற்சி இதுவெனக் கூறப்படுகின்றது.


இந் த முயற் சியில் உலகக் கோடீஸ்வரரான பில்கேட்ஸ் உடன் மைக்ரோ சொப்ட் நிறுவனத் தொடக்குநர் ஈடுபட்டுள்ளார். (உ)

## எண்ணெய் விலை ஸ்திரத் தன்மை

(லண்டன்)

கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க பெற்றோலியத்தை ஏற்றுமதி செய்யும் நாடுகள் சங்கம்முடிவு செய்ததை அடுத்து ஆசியாவில் நடைபெற்ற வர்த்தகத்தில் எண்ணெய் விலை ஸ்திரத்தன்மை அடைந்துள்ளது.

பெற்றோலிய பொருட்களை அதிக அளவில் உற்பத்தி செய்யும் நாடான சவுதிஅரேபியாவில் அடிக கடி தீவரவாதிகளின் தாக்குதல் நடந்ததால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலைகள் அதி கரித்துக் கொண்டே இருந்தன. இதையடுத்து பெற்றோலியத்தை ஏற் றுமதி செய்யும் நாடுகள் சங்கத்தின் கூட்டம் நடந்தது. அதில் யூலை முதலாம் திகதி முதல் கச்சா எண்ணெய் உற்பத்தியை நாள் ஒன்றுக்கு 20 இலட்சம் பரல் கள் அதிகரிப்பது ஒகஸ்ட் முதலாம் திகதி மேலும் 5 இலட்சம் பரல் கள் அளவிற்கு உற்பத்தியை பெருக்குவது என்று தீமானிக் கப்பட்டது. (உ)



எதென்சில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியை முன்னிட்டு ஒலிம்பிக் தீபம் உலகின் 27 நாடுகளிலுள்ள 34 நகரங்களுக்கு கொண்டு செல்லப்படுவது வழக்கம்.அந்தவகையில் எதிர்வரும் ஆகஸ்ட் 13ஆம் திகதி நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கான தீபம் அவுஸ்திரேலிய சிட்னி துறைமுகத்தை அடைந்த போது பிடிக்கப்பட்ட படம்.

# புனரமைக்கப்படுமா புளியங்கூடல்?

## ஊர்த் தரிசனம் 4

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள விவசாயக் கிராமம் புளியங்கூடல்.

இக்கிராமம் வேலணைப் பிரதேச செயலர் பிரிவின் எல்லையில் உள்ளது. இக்கிராமத்தில் விவசாயத்தைப் பிரதான தொழிலாகக் கொண்டு 312 குடும்பங்களைச் சேர்ந்த 1126 பேர் வாழ்கின்றார்கள். இவர்களில் 170 குடும்பங்கள் வீட்டுவசதியின்றி பெரும் கஷ்டங்களின் மத்தியில் வாழ்கின்றார்கள். இவர்களுக்கு குடியிருப்பு வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எத்தொண்டு நிறுவனங்களும் முன்வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வீட்டு வசதியற்ற குடும்பங்களில் சொந்தக் காணியில்லாத குடும்பங்கள் 104உம், காணி உள்ள குடும்பங்கள் 66 உம் அடங்குகின்றன. கிராமத்தில் அரைவாசிக் குடும்பங்கள் வீட்டு வசதியில்லாமையினால் இம்மக்கள் கூட்டுக் குடும்பங்களாகவும், உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள் எனக் கூறுகிறார் புளியங்கூடல் கிராமியப் புனர்வாழ்வு நல்லிணக்கக் குழுவின் உறுப்பினர் த.சந்திரகுமார்.

வெளிக் கண்ணோட்டத்தைப் பார்க்கும் பொழுது எவ்வித குறைபாடும் இல்லாத வளர்ச்சியடைந்த கிராமமாகப் பார்ப்பவர்கள் கண்ணுக்குத் தென்படலாம். ஆனால், அங்கு சென்று கிராமிய மக்களுடன் கலந்துரையாடிய பின்தான் தெரிகிறது பல குறைபாடுகளும், பிரச்சினைகளும் வெளிக் கொணரப்படாத நிலையில் இருப்பது.

### பொது அமைப்புக்களின் பாராமுகம்

இக்கிராமத்தில் பல பொது அமைப்புக்கள் இயங்குகின்ற போதிலும், எவ் அமைப்பும் இக்குடும்பங்களின் அவல நிலையினை வெளிக்கொணர நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கிராமத்தில் புளியங்கூடல் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்,மகாமாரி சனசமூக நிலையம், மகாமாரி விளையாட்டுக்கழகம், விவசாயிகள் சம்மேளனம், கிராமிய புனர்வாழ்வு நல்லிணக்கக்குழு, கிராமிய சமுர்த்தி அமைப்புக்களும, சிறுவர் நல வாழ்வு நிலையம், இந்து வாலிபர் சங்கம் ஆகிய சில பொது அமைப்புக்களாகும்.

இப்பொழுது அமைப்புக்கள் பல இயங்காமல் இருப்பதாகவும், இந்நிலைமாற வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இக்கிராமத்தில் மேற்படி வீட்டுவசதி அற்ற குடும்பங்களுக்கு வீட்டுவசதியும், மலசலகூட வசதியும், குடிநீர் வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

### அடிப்படை வசதிகள் இல்லை

இதைவிட இக்கிராமத்தில் ஒட்டுமொத்தத்தில் பல தேவைகள் காணப்படுகின்றன.

புளியங்கூடல் கிராமத்தில் உள்ள வீதிகள் பல திருத்தப்படாமல் உள்ளது. எனவே, இக்கிராமத்தில் 6 கிலோ மீற்றர் தூரமான வீதி புனரமைக்கப்பட வேண்டியுள்ளது.

இன்றுவரை மின்சார இணைப்பு மீண்டும் வழங்கப்படாத நிலையில் இக்கிராமம் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது. இந்நிலை மாறி இக்கிராமத்திற்கும் முழுமையான மின்சார இணைப்பு வழங்கப்பட வேண்டும்.

இக்கிராமத்தில் உள்ள மாணவர்களின் கல்வி விருத்திக்கு நூலக வசதி எதுவும் இல்லை. இதனை நிவர்த்தி செய்ய நூலக கட்டடமும், நூலக வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

ஏற்கனவே கூறப்பட்ட பொது அமைப்புகள் பலவும் அதிகாரிகள் பலருடனும் கிராம நலனில் அக்கறையின்றி சோர்வடைந்த நிலையில் காணப்படுகின்றது. இவ்வமைப்புக்கள் உற்சாகமாகி கிராம நலனுக்காகச் செயற்பட்டு புனரமைப்பினை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் கிராமத்தில் விளையாட்டு மைதானம் இல்லாத நிலை காணப்படுகின்றது. இதனால் விளையாட்டு வீரர்களின் திறமை வெளிப்படாது உள்ளது. இதற்காக விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்பட்டு வீரர்கள் வளர்ச்சியடைவதற்கு வழியேற்படுத்தப்பட வேண்டும்.

மேற்படி குறைபாடுகள், பிரச்சினைகள், தேவைகளை நிவர்த்தி செய்ய அரச, அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்கள் முன்வந்து இக்கிராமத்தின் செழுமையினை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

**தரிசனம் :**
**ஞா.செந்தமிழ்ச்செல்வன**
**செய்தியாளர்,**
**ஊர்காவற்றுறை.**

**தொகுப்பு : சசிரஜனி புலேந்திரன்**

# சுகாதார ஊழியர்களின் போராட்டம் முறையற்றது

## சுகாதார அமைச்சர் கருத்து

(கொழும்பு)

பதிவு செய்யப்பட்ட சுகாதார ஊழியர்கள் மற்றும் உதவி மருத்துவ அதிகாரிகள் தொழிற்சங்கக் கூட்டமைப்பு மேற்கொள்ளவிருக்கும் தொழிற்சங்க நடவடிக்கைகள் எந்த வகையிலும் நியாயமானதல்ல என சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 9,10ஆம் திகதிகளில் நாடாளவிய ரீதியில் சுகாதார ஊழியர்கள் மற்றும் உதவி மருத்துவ அதிகாரிகள் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தவுள்ளதாக அறிவித்திருந்தமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்திருந்தார்.

அங்கு தொடர்ந்தும் இது பற்றிக் கூறுகையில்,

சுகாதார ஊழியர்கள் மற்றும் உதவி அதிகாரிகளின் சம்பள முரண்பாடுகளை நீக்குவது குறித்து நான் ஏற்கனவே திஸ்ஸ தெய்வேந்திரா சம்பள முரண்பாட்டுக் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன்.

அத்துடன், இது தொடர்பாக அறிக்கையையும் அமைச்சரவையில் நான் சமர்ப்பித்துள்ளேன்.

எனவே, இத்தகைய நிலையில் அவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்துவது நியாயமற்றது என்பதுடன் போராட்டத்தை நடத்தும் தீர்மானத்தை உடனடியாகக் கைவிடவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (உ-60,10)


**அன்பார்ந்த மாணவர்களே!**

**வலம்புரியின்**
**மற்றுமோர் கல்விச் சேவை**

**க.பொ.த. (சா/த)**
**மாணவர்களுக்கான மாதிரி**
**வினாத்தாள்கள்**

**மிக விரைவில் உங்கள்**
**வலம்புரியில் எதிர்பாருங்கள்.**



**மீண்டும் உங்கள் வலம்புரியில்**
**விவாத அரங்கு**
**விடயம்**
தொலைக்காட்சியில் தொடராக இடம் பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாணக் குடும்ப-சமூக கலாசார பண்பாட்டு உறவுகள்
பலப்படுகின்றது
ஊப்படுகின்றது
உங்கள் கருத்துக்களை
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு விரைவாக அனுப்பிவையுங்கள்


## வெளிச்சக் கூடுகளால் அச்சம்

(மூளாய்)

மாதகல் பகுதியில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் அவ்வப் போது மக்கள் குடியிருப்புக்களை நோக்கிப் பராவெளிச்சக் கூடுகளை ஏவி வருகின்றனர். பொன்னாலை, மூளாய்,சுழிபுரம் போன்ற பகுதிகளில் இவ் வெளிசசங்கள் மிகவும் பிரகாசமாகத் தெரிகின்றன. சமாதான காலத்தில் கடற் படையினரின் இத்தகைய செயற்பாடுகள் மக்கள் மத்தியில் அச்ச நிலையைத் தோற்றுவித்துள்ளன. (உ-50)

## சிவாவின் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் மு.சிவசிதம்பரத்தின் இரண்டாவது ஆண்டு நினைவு தினம் நேற்றுக் காலை 10.00 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி யின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

கூட்டணியின் யாழ்.மாவட்ட அலுவலக நிர்வாகப் பொறுப்பாளர் செல்லையா விஜயரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கூட்டணி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (உ-18)

## இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் இடம்பெறாத யாழ். உயர்தர தொழில்நுட்ப நிறுவன உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா 4ஆம் வருட இரண்டாம் அரையாண்டு இறுதிப் பரீட்சை எதிர்வரும் 12,13ஆம் திகதிகளில் நடைபெறும் என நிறுவன இயக்குநர் த.இராசரத்தினம் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். (உ)

## பஞ்சவர்ண நரியார் மேடையேற்றம்

(யாழ்ப்பாணம்)

செயல்திறன் அரங்க இயக்கத்தின் பஞ்சவர்ண நரியார் நாடகம் எதிர்வரும் வாரங்களில் பண்ணாகம் மெய்கண்டான் ம.வி, அராலி ம.வி., அராலி இந்துக் கல்லூரி, வட்டு மத்திய கல் லூரி, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றில் மேடையேறறப்படவுள்ளது. (உ)

**அன்பு வாசகர்களே!**

ஊர்த்தரிசனப் பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகிறது. உங்கள் ஊரில் நிலவும் நிறை குறைகளை எழுதி, உங்கள் ஊருக்குப் புத்துயிர் அளியுங்கள். உங்கள் ஆக்கங்களைப் புகைப்படங்களுடன்,

**ஊர்த்தரிசனம்**
**வலம்புரி**
**இல.15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு எழுதி அனுப்பி வையுங்கள்.


**இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து**



ரக்ஷாபரணன் - நளாயினி
தம்பதியினரின்
செல்வப் புதல்வி
லக்ஷியா

தனது இரண்டாவது பிறந்தநாளை இலண்டனிலுள்ள தனது இல்லத்தில் இன்று (06.06.2004) ஞாயிற்றுக்கிழமை கொண்டாடுகின்றார்.

இவரை அன்பின் அப்பா, அம்மா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா ஆகிய அனைவரும், பலகலையும் பெற்றுச் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்: சி.சவுந்தரநாயகம்.
(தாத்தா)

(C-213)

## இன்று ஒரு தகவல்

# செல்வம்

ஒரு ஊரில் பெரிய செல்வந்தர் ஒருவர் இருந்தார். பணத்திற்குப் பஞ்சமில்லை. அதனால் இந்த உலகத்தில் தன்னால் முடியாத காரியம் எதுவுமே இல்லை என நினைத்தார். பணம் இருந்தாலே அந்த நினைப்பு தானாக வந்து விடும். அதனால் இவரும் அப்படி நினைத்ததில் ஒன்றும் தவறில்லை.

அந்த ஊருக்கு ஒருமுறை குருநானக் வந்தார். அவருக்கு இந்தச் செல்வந்தர் மிகவும் பிரமாதமாக ஊர் எல்லையில் வைத்து வரவேற்பளித்தார். "எங்கள் வீட்டிற்கு வந்து விருந்துண்ண வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார். அவரும் சரி என்று ஒத்துக்கொண்டார்.

உடனே தனது மாளிகையில் பெரியதோர் விருந்திற்கு ஏற்பாடு செய்தார். குருநானக்கை அழைத்துக்கொண்டு வீடு சென்றார். அமரவைத்தார். "ஐயா... நான் இந்த ஊரிலேயே மிகவும் வசதி படைத்தவன். என்னால் எல்லாம் செய்ய முடியும். உங்களுக்காக நான் என்ன செய்யவேண்டும் என்று கூறுங்கள். எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. என்னால் செய்யமுடியும். என்ன செய்யவேண்டும்? கூறுங்கள்!" என்றார் பணிவாக.

இதைக்கேட்டதும் குருநானக் சிந்தித்தார் சிறிது நேரம். அதன் பின் தனது சட்டைப்பையினுள்ளே கையை விட்டு ஒரு பழைய ஊசி ஒன்றை எடுத்தார். அதை இவரிடம் கொடுத்தார். "இதோ.... பாருங்கள்... இவ்வளவு தூரம் நீங்கள் கேட்பதனால் கூறுகிறேன். எனக்கு நீங்கள் செய்யவேண்டிய உதவி இது தான்" என்றார்.

இவரும் ஊசியைக் கையில் வாங்கிக்கொண்டு "இதை என்ன செய்யவேண்டும்?" என்றார். "நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால்.... இந்த ஊசியைக் கவனமாக வைத்துக்கொள்ளவேண்டும். நாம் இருவரும் இறந்த பின்பு இன்னொரு உலகில் நாம் சந்திக்கக் கூடிய வாய்ப்புள்ளது. அப்போது இந்த ஊசியை என்னிடம் தாருங்கள் இதுதான் நீங்கள் எனக்காகச் செய்யவேண்டிய உதவி" என்றார் குருநானக் சிரித்துக்கொண்டே.

இதைக்கேட்டதும் அந்தச் செல்வந்தர் முழிக்க ஆரம்பித்து விட்டார். அது எப்படி? ... நான் சாகும் போது இந்த ஊசியை எவ்வாறு வேறு உலகத்திற்கு எடுத்துக்கொண்டு வரமுடியும்? " என்றார். "ஊசி போன்ற சிறு பொருளைக்கூட இவ்வுலகை விட்டு நாம் போகும் போது எடுத்துக்கொண்டு போக முடியாது எனும் போது உங்கள் செல்வத்தை எப்படி அங்கே எடுத்துவரப் போகின்றீர்கள்?" என்று கேட்டார் குரு நானக்.

அதன் பின் தான் அந்த செல்வந்தர் யோசிக்க ஆரம்பித்தார். குருநானக் சொன்னார் "இதோ பாருங்கள் நாம் செய்யும் நல்லது கெட்டதுதான் கடைசி வரை நம்முடன் கூட வரும். அடுத்தவர்கள் நன்றாக இருக்க வேண்டும். என்பதற்காகச் செலவு செய்யவேண்டும் அப்படிச் செய்யவில்லை என்றால் எந்தப் பயனும் இல்லை" என்றார். இதைக்கேட்ட செல்வந்தரின் அறிவுக் கண் திறந்ததாம். உடனே குருநானக்கை வணங்கினார் "ஐயா....என்னிடமிருந்த ஆணவம் போய்விட்டது. இனிமேல் என்னிடம் உள்ள செல்வத்தை நல்லவழியில் செலவழிப்பேன்" என்றார்.

நம்மிடம் உள்ள பணம் எப்போதும் நம்முடன் வந்து கொண்டிருக்காது என்பது இதிலிருந்து புரிகின்றது. அதற் காக "நாம் பணம் சேர்ப்பதனைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. பேசாமல் படுத்துத் தூங்கிக் கொண் டிருந்தால் போதும்" என்று நினைத்துவிடக்கூடாது.

முறையான வழியில் பணம் சேர்க்கவேண்டும் அதை முறையான வழியில் செலவு செய்யவேண்டும். அதனால் ஏற்படக்கூடிய மனநிறைவு இருக்கின்றதல்லவா அதனை அனுபவிப்பவர்களுக்குத்தான் புரியும்.

சொர்க்கத்திற்குச் செல்பவர்கள் இங்கிருந்து பணத்தை எடுத்துக்கொண்டு போகமுடியாது. ஆனால் நம் செல்வத்தை மற்றவர்களுக்குப் பயன்படச்செய்து அதனால் ஏற்படும் புண்ணியம் இருக்கின்றதல்லவா அதை எடுத்துக்கொண்டு போக முடியுமாம் இதுதான் ஆன்மீகவாதிகள் கூறுவது.

ஜான் நியூட்டன் என்று ஒருவர் கூறினார் " நான் எப்போதாவது சொர்க்கத்திற்குப்போய்ச் சேர்ந்தால் அங்கு 3 அதிசயங்களைப் பார்ப்பேன்" என்றார். "என்ன" என்று கேட்டனர். " நான் யார் யாரெல்லாம் இருக்க மாட்டார்கள் என்று நினைத் தேனோ அவர்களில் சிலர் அங்கிருப்பார்கள் அது ஒரு அதி சயம்" என்றார். சரி அடுத்தது என்ன? என்றனர்.

அடுத்து அங்கே இருப்பார்கள் என்று எதிர்பார்த்த சிலர் இருக்கமாட்டார்கள்! மூன்றாவது அதிசயம் என்ன தெரியுமா? நான் அங்கே இருக்கின்றேன் பாருங்கள் அது தான் மூன்றாவது அதிசயம்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கிய வாக்குறுதியில் மாற்றமில்லை

## பிரதி நிதியமைச்சர் உறுதிப்படுத்துகிறார்

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என தேர்தலின் போது அளிக்கப்பட்ட உறுதிமொழிகளை அரசாங்கம் எப்படியாவது நிறைவேற்றியே தீருமென பிரதி நிதிஅமைச்சர் ரஞ்சித் சியம்பலாப் பிட்டிய உறுதியளித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிலர் அரசின உறுதிமொழிகள் பற்றி விமர்சித்து வருகின்றமை பற்றியும்,பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவது அரசின் வெறும் கண்துடைப்பு நடவடிக்கையென கூறி வருகின்றமை குறித்தும் ஊடகம் ஒன்றிற்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து இது பற்றிக் கூறுகையில்,

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதிலும் உரமானியக் கொடுப்பனவிலும் அரசாங்கம் பெரும் நிதிக் கஷ்டங்களை எதிர்நோக்குவதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறி வருகின்றது. இந்தக் கூற்றில் எதுவித உண்மையுமில்லை.

சர்வதேச நாட்டு வர்த்தகர்கள் பலர் இலங்கையில் தமது முதலீடுகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், சர்வதேச நிதிநிறுவனங்கள் இலங்கை அரசுக்கு கடனடிப்படையில் நிதிவழங்க முன்வந்துள்ளன.

எனவே, அரசுக்கு எந்தவகையிலும் நிதிக்கஷ்டம் இல்லை என்பதை கூறிவைக்க விரும்புகிறோம்.

இதேவேளை,ஐக்கிய தேசிய "வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும்" என உறுதியளித்து 2001 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தது.

ஆனால்,அந்த உறுதிமொழியை ஆட்சியில் இருந்த போது காப்பாற்றத் தவறிவிட்ட ஐக்கிய தேசிய முன்னணி நீதி கோரிச் சென்ற பட்டதாரிகளை பொலிஸாரைக் கொண்டு தாக்கியது.

இதனை பட்டதாரிகள் மறந்திருந்திருக்க மாட்டார்கள். எனவே நாம் ஆட்சிக்கு வரும் போது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவோம் என்றார். (உ-60,10)

# மக்கள் விடுதலை முன்னணியை தமிழ் மக்கள் முற்றாக நிராகரிப்பர்

## மாவை எம். பி. எச்சரிக்கை

(கொழும்பு)

வடக்கு, கிழக்குக்கான இடைக்கால நிர்வாக சபை கோரப்படுவது எதற்காக என்பதை புரிந்து கொளளாத ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவனச, தமிழ் மக்களின் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கப் போகிறார் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கேள்வி எழுப்பியுள்ளார்.



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் என்ற வகையில் வமல் வீரவன்ச வெளியிட்டுள்ள இந்தக் கருத்து பயங்கரமானது எனவும் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளர்.

வடக்கு, கிழக்குத் தன்னாட்சி அதிகாரமென்பது போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கையை மேம்படுத்தும் ஒரு ஏற்பாட்டை ஜே.வி.பி. நிபந்தனையெனக் கூறுவது, இவ்விடயம் தொடர்பில் அக்கட்சியினர் மத்தியில் காணப்படும் சிறந்த தெளிவின்மையையே உணர்துவதாகவும் அவர் கூறியுள்ளார். இது குறிதது ஜனாதிபதி ஜே.வி. பிக்கு விளக்கமளிக்க வேண்டும் எனவும் தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இந்த மனிதாபிமானச் செயலைக்கூட ஜே.வி.பி. அங்கிகரிக்காது போனால், அந்தக் கட்சியைத் தமிழ் மக்கள் முற்றாக நிராகரிக்கும் நிலை ஏற்படும் எனவும் மேலும் கூறியுள்ளர்.

(உ-121)

## இராசி பலன்

**06.06.2004**

**(வைகாசி 24,ஞாயிற்றுக்கிழமை)**
**சதுர்த்தி பின்னிரவு 12.54 வரை**
**உத்தராடம் பின்னிரவு 12.14 வரை**
**இராகுகாலம் 4.22-5.52 மணிவரை**
**சுபநேரம் 8.52-10.22 மணிவரை**
**சங்கடகர சதுர்த்தி விரதம்**

**மேடம்**
செய்தொழில் விருத்தி, நன்கொடை, இஷ்ட சித்தி, நல்ல மரியாதை.

**இடபம்**
தேசாந்திர வாசம், எதிர்பாரா்த செலவு, முயற்சி தாமதம், உஷ்ண நிலை.

**மிதுனம்**
மனக்கவலை, பொருள் விரயம், சரீர பீடை, காரிய தடங்கல்.

**கடகம்**
மனோ சௌக்கியம், மாதர் நட்பு, எடுத்த கருமங்கள் கைகூடும், வாக்கு மேன்மை.

**சிங்கம்**
சிந்தனை மிகுதி, புதிய முயற்சி, நண்பர்கள் சந்திப்பு உடல் நலம்.

**கன்னி**
அஜீரண ரோகம், காரிய இடையூறு, பணத் தட்டுப்பாடு, மனக் கவலை.

**துலாம்**
அதிக செலவு, பெரியோர் வெறுப்பு, திடீர் நன்மை, தொழில் சிந்தை.

**விருச்சிகம்**
நல்ல வரவேற்பு, காரிய அனுகூலம், தெய்வ சிந்தை, போசன சுகம்.

**தனுசு**
முயற்சி தாமதம், அமைதிக் குறைவு, போசன சுகக் குறைவு, பண விரயம்.

**மகரம்**
வெகுமானம், கலந்துரையாடல், உற்சாகம், விருந்துபசாரம்.

**கும்பம்**
சோம்பல் நிலை, காரிய அலைச்சல், தன விரயம், கற்பனை மிகுதி.

**மீனம்**
ஆனந்தம், குடும்ப சுகம், நண்பர்கள் சந்திப்பு, பொருள் சேர்க்கை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

*வளவன்*

## கார்ப் திட்டத்தின் கீழ்

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 கிராமங்கள் புனரமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கார்ப் திட்டத்தின் கீழ் 5 கிராமங்கள் மக்கள் முன்வைக்கும் திட்டங்களை செயற்படுத்தும் முறையில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்கான திட்டங்களுக்கு 4 அரச சார்பற்ற நிறுவனங்கள் தெரிவாகியுள்ளன.தமிழர் புனர்வாழ்வுக்கழகம், உயர்வலய அபிவிருத்தி நிறுவனம் ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கை நிறுவனம், சேவாலங்கா ஆகிய அரச சார்பற்ற நிறுவனங்களூடாக முல்லைததீவின் 5 கிராமங்களை புனரமைக்கவுள்ளன. ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜோ்மனி அரசு, நெதர்லாந்து அரசு என்பவற்றின் நிதியூட்டத்தில் கார்ப் இதனை முன்னெடுக்கவுள்ளது.

இதனடிப்படையில் புனரமைப்புக்கு மாந்தை கிழக்கில் பாண்டியன்குளம், துணுக்காயில் சிவநகர், ஒட்டுசுட்டானில் பணிச்சன்குளம், கரைதுறைப்பற்றில் கேப்பாப்புலவு, புதுக்குடியிருப்பில் நெத்தலியாறு ஆகிய கிராமங்கள் தெரிவாகியுள்ளன.

இக் கிராமங் களின் மக்களை ஒன்று கூட்டி அவர்களின் கருத்துக்களை பெற்று அதனடிப் படையில் திட்டங்களை செயற் படுத்துவது கார்ப்பின் அடிப்படை நோக்கமாகும். (உ)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பார்வதவர்த்தனி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

தொடா்ந்து மாலை விசேடபூசை, அம்பாள் திருவீதியுலா என்பனவும் இடம்பெறவுள்ளன. (உ)

உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல் - குறள்

வலம்புரி

## ஆட்சியை துறந்த புத்தரும் ஆன்மீகத்தை துறந்த பிக்குகளும்

ஹெல உறுமயவைச் சேர்ந்த பௌத்த பிக்குகளின் பயமுறுத்தல் காரணமாகவே தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமாச் செய்ததாக ஹெல உறுமயவின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு பின்னர் பதவியை இராஜிநாமாச் செய்த ரத்னசீல தேரர் தெரிவித்துள்ளார்.

ஹெல உறுமயவைச் சேர்ந்தவர்கள் ரத்னசீல தேரரைக் கடத்திச் சென்று அவரை இராஜிநாமாச் செய்யுமாறு பயமுறுத்தியதாக தென்னிலங்கைச் சிங்களப் பத்திரிகைகளும், ஆளும் கட்சி எம்.பிகளும் தெரிவித்திருந்தனர்.

எனினும் தான் கடத்தப்படவில்லையெனவும், தனது சுயவிருப்பின் பேரிலேயே இராஜிநாமாச் செய்ததாகவும் பத்திரிகைகளும் அரசியல்வாதிகளும் விசமத்தனமான பிரசாரங்களில் ஈடுபட்டுவருவதாகவும் ரத்னசீல தேரர் கூறியிருந்தார். இதன்காரணமாக ரத்னசீல தேரரின் இராஜிநாமாவும் அதனோடு தொடர்புடைய செய்திகளும் அடங்கிப்போயின.

ஆனால ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர்களால் தான் கடத்திச் செல்லப்பட்டதாகவும், தன்னைப் பயமுறுத்தி இராஜிநாமாக் கடிதத்தில் கையொப்பமிடவைத்ததாகவும் ரத்னசீல தேரர் கொழும்பு நீதிமன்றில் தற்போது வழக்குத் தாக்கல் ஒன்றைச் செய்துள்ளார்.

தான் கடத்தப்பட்ட செய்தியை வெளியில் பகிரங்கப்படுத்தக் கூடாதெனவும், அவ்வாறு வெளிப்படுத்தினால் உயிராபத்து ஏற்படுமெனவும் ஹெல உறுமய தேரர்கள் எச்சரிக்கை செய்ததன் காரணமாக கடத்தப்பட்ட செய்தியைத்தான் உடனடியாக வெளிப்படுத்தவில்லையெனவும் அவர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் சபாநாயகர் பதவிக்குப் போட்டியிட்டவருக்கு ஆதரவாக ரத்னசீல தேரர் வாக்களித்திருந்தார். இதனால் ஆத்திரமுற்ற ஹெல உறுமயவைச் சேர்ந்த பௌத்த பிக்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள், ரத்னசீல தேரரைக் கடத்திச் சென்று, துன்புறுத்தி-பயமுறுத்தி இராஜிநாமாக் கடிதத்தில் பலாத்காரமாக அவரின் கையெழுத்தைப் பெற்றுள்ளனர்.

இச் சமாச்சாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் ஊடாக அம்பலமாகியுள்ளது. உலக வாழ்வை-பற்றுதலைத் துறந்து இறைபணி செய்வதற்காக காவிதரித்து, முடி நீக்கிப் புறப்பட்ட புத்த பிக்குகள் தாம் சென்ற பாதைகளைக் கடந்து அரசியலுக்குள் பிரவேசித்தனர். சமயத் துறவிகள் என்போர் மனித சமூகத்திற்கு ஆன்மீகத்தைப் போதித்து ஆன்ம விடுதலையைப் பெற்றுக் கொடுக்க வேண்டியவர்கள். இதுவே அவர்களின் பணி. இதனை இந்து சமயம் சார்ந்த சிவாச்சாரியார்களும், கத்தோலிக்க சமயம் சார்ந்த மதகுருமாரும், முஸ்லிம் சமயம் சார்ந்த மௌலவிகளும் கடைப்பிடித்து வருகின்றனர்.

அவர்கள் தங்களின் சமய நெறிகளை அனுஷ்டிப்பதன் ஊடாக தங்களின் பணியினின்று விலகாமல் ஆன்மீகப் பணியை முன்னெடுக்கின்றனர்.

ஆனால் பௌத்த பிக்குகள் இதற்கு மாறாக நடந்து கொள்கிறார்கள். அவர்கள் அரசியலில் தலையிட்டு தங்களின் சொற்படி ஆட்சியாளர்கள் நடக்க வேண்டுமென கட்டளையிடுகிறார்கள். இதற்கும் மேலாக அவர்கள் எந்த நோக்கத்திற்காக காவி தரித்து துறவை மேற்கொண்டார்களோ அதனைக் கைவிட்டுவிட்டு அரசியலில் இறங்கி தேர்தலில் போட்டியிட்டு, பாராளுமன்ற உறுப்பினர்களாக பதவியேற்றுள்ளனர்.

எப்படியிருக்கிறது பௌத்த துறவிகளின் திருகுதாளம். ஆன்மீக வாதிகள் அரசியல் வாதிகளாக மாறினால் நாடு எப்பாடுபடுமென்பதை சொல்லித் தெரியவேண்டியதில்லை. பாராளுமன்றத்திற்குச் சென்ற பௌத்த பிக்குகள் இப்போது பயங்கரவாதிகளாக மாறிவிட்டனர். சக பிக்கு ஒருவரைக் கடத்திச்சென்று அவரைத் தாக்கி-பயமுறுத்தி இராஜிநாமாச் செய்ய வைத்துள்ளனர். அது மட்டுமன்றி நடந்த சம்பவம் வெளியில் தெரியவருமாயின் கொலை செய்ய வேண்டி வருமெனவும் எச்சரித்துள்ளனர்.

அவ்வாறாயின் பௌத்தபிக்குகளிடம் இருக்கக் கூடிய காடைத் தனம், பயங்கரவாதம் எவ்வளவு ஆபத்தானதென்பதை சர்வதேச நாடுகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கௌதம புத்த பிரான் ஆட்சியைத் துறந்து ஆன்மீக வாழ்வை மேற்கொள்ள இலங்கையில் பௌத்த பிக்குகளோ ஆன்மீகத்தைத் துறந்து அரசியலில் இறங்கியுள்ளனர்.

## சட்டவிரோத குடியேற்றங்களைத் தடுக்க

# ஐரோ. நாடுகளுடன் இலங்கை மீள் அனுமதி உடன்படிக்கை

(அனுராதபுரம்)

இலங்கைக்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமிடையிலான மீள் அனுமதி உடன்படிக்கை நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

சட்டவிரோத குடியேற்றங்களைத தடுத்து நிறுத்துவதற்காகவே இவ் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டுள்ளது.

இவ் உடன்படிக்கையில் இலங்கை சார்பாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எச்.என்.ஜி.எஸ் பலிகாகாரவும் ஐரோப்பிய நாடுகள் சார்பில் இலங்கைக்கான அயர்லாந்துத் தூதுவர் பிலிப்மெக்ரோனா இலங்கைக்கான ஐரோப்பிய ஆணைக் குழுவின் தலைவர் வூடர்வில்ரன் ஆகியோரும கைச்சாத்திட்டனர்.

இவ்வாறான ஒரு மீள் அனுமதி உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திட்டமை இதுவே முதல் தடவை என வெளிவிவகார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இவ உடன்படிக்கை மூலம் இலங்கைக்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமிடையிலான சினேகபூர்வ உறவுகள் பலப்படும் எனவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (உ-4,61)

## நேர்முகத்தேர்வு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத் துறையில் பதவி நிலைகளுக்கு தொழிலற்ற பட்டதாரிகளை சேர்த்துக்கொள்ளல் திட்டத்தின் கீழ் வலி. கிழக்கு பிரதேச செயலகத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும 9,10 ,11 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் யாவும் ஏற்கனவே தபாலில் சேர்க்கப்பட்டுள்ளது எனவும் வலி.கிழக்கு உதவிப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (உ)

## வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெருக்கும் வகையில் ஒப்பந்தங்கள்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்குச் சென்று வேலைவாய்ப்புத் தேடும் இலங்கை யர்களின் நலனைக் கருத்தில் கொண்டு வேலைவாய்ப்புக்களை வழங்கும் நாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்யப்படவுள்ளதாக வெளி நாட்டு வேலைவாய்பபு அமைச்சர் அதாவுட செனிவிரட்ண தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப் புகளைப் பெற்றுச் செல்லும் இலங்கையர்கள் அங்கு எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக மாதாந்தம் ஆயிரத்து 500ற்கு மேற்பட்ட முறைப்பாடுகள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சிற்கு கிடைத்து வருகின்றன.

இவற்றைக் கருத்தில் கொண்டே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புகளைத் தேடிச் சென்ற சமயம் அங்கு இழப்புகளை யும் இன்னல்களையும் சந்தித்த இலங்கையர்களுக்கு இலங்கை அரசினால் நஷ்ட ஈடுகளும் வழங்கப்படவுள்ளன.

இவ்வாறு பாதிக்கப்பட்டோரில் ஒரு தொகுதியினருக்கு ஏற்கனவே நஷ்ட ஈடுகள் வழங்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-4,61)

## வவுனியாவில் டெங்கு நோய் பரவும் அபாயம்

(செட்டிக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் டெங்கு நோயைப் பரப்பக் கூடிய நுளம்புகள் அதிகம் காணப்படுவதாக சுகாதார சேவையினர் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் பெய்த மழையின் பின்னரே இவ்வாறான நுளம்பு பெருகியிருப்பதாகவும் இதனால் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு டெங்கு நோய்த் தடுப்பு நடவடிககைகள் தீவிரப்படுத்தபட்டிருப்பதாக வவுனியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், நாளை 7ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரையில் டெங்கு நோய் ஒழிப்பு வாரம் வவுனியாவில் அனுஷ்டிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4,61)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

சூரியோதயத்திற்கு முன்னரே தயிரிலிருந்து வெண்ணெயைக் கடைந்தெடுக்க வேண்டும். பகல் வேளையில் கடைந்தால் நல்ல வெண்ணெய் கிடைக்காது. அது போலவே இளமையிலேயே தங்கள் மனத்தை இறைவன் பால் செலுத்தி பக்தி சாதனைகள் புரிபவர்களே இறைவனை அறிகின்றார்கள்.

சுவாமி விவேகானந்தர்

## ரயில் சேவையை சிறந்த முறையில் நடத்துவதில் சிரமம்

(கோட்டை)

ரயில் வண்டி இயந்திரங்களில் ஏற்பட்டுள்ள கோளாறுகள் காரணமாக ரயில் போக்குவரத்துச் சேவையை சிறந்த முறையில் நடத்த முடியாதிருப்பதாக ரயில்வே போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் ரயில் போக்குவரத்தை நம்பியுள்ள பயணிகள் பல அசௌகரியங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

நாட்டில் திருப்திகரமான முறையில் ரயில் போக்குவரத்துச் சேவையை நடத்துவதற்கு நாள் ஒன்றிற்கு 110 ரயில்கள் சேவையில் ஈடுபட வேண்டும்.

இவ் ரயில்களுடைய தேவைகளுக்கு 110 ரயில் இயந்திரங்கள் தேவைப்படுகின்றன. ஆனால் தற்பொழுது 96 ரயில் இயந்திரங்களே உள்ளதனால் ரயில் போக்குவரத்துச் சேவையை சிறந்த முறையில் நடத்த முடியாதிருப்பதாக ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (உ-4,61)

## பெண்களின் உள்ளாடையில் புத்த பெருமானின் உருவம்

### பௌத்த துறவி போர்க்கொடி

(கொழும்பு)

பெண்களின் உள்ளாடை மற்றும் சில வியாபாரப் பொருடகளில் வர்த்தக குறியீடாக புத்தரின் உருவம் பயனபடுத்தப்பட்டு வருவது தொடர்பாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கெதிராக நடவடிக்கை எடுக்கத் தவறிய பொலிஸ் அதிகாரிக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக பௌத்த துறவி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புத்தரின் உருவம் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டு வருவதற்கு எதிராக தக்க நடவடிக்கை எடுக்குமாறு தாம் குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரியை அறிவுறுத்தியதாகவும், இத்தகைய நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு அவர் தவறிவிட்டதாகவும் கொழும்பு சம போதி விகாரையைச் சேர்ந்த குசல தர்ம தேரர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்தே தாம் அவருக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதென தீர்மானித்ததாகவும் அவர் கூறியுள்ளார். (உ)

## வவுனியாவில் டெங்கு நோய் பரவும் அபாயம்

(செட்டிக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் டெங்கு நோயைப் பரப்பக் கூடிய நுளம்புகள் அதிகம் காணப்படுவதாக சுகாதார சேவைகள் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட் டுள்ளது.

அண்மைக் காலத்தில் பெய்த மழையின் பின்னரே இவ்வாறான நுளம்பு பெருகியிருப்பதாகவும் இதனால் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு டெங்கு நோய்த் தடுப்பு நடவடிக்கை கள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக வவுனியா மாவட்ட சுகாதார சேவை கள்பணிப்பாளர் கேதீஸ்வரன தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், நாளை 7ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரையில டெங்கு நோய் ஒழிப்பு வாரம் வவுனி யாவில் அனுஷ்டிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4,61)

## அதிக பக்கங்கள் கொண்ட பாட நூலை பகுதி பகுதியாக வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் பாட நூல்களை பயன்படுத்துவதில் எதிர்நோக்கும் கஷ்டங்களைக் குறைப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாட நூல்களை ஒரே தடவையில் பெரும் தொகையான பக்கங்களைக் கொண்ட நூலாக அச்சிடுவதற்குப் பதிலாக பிரிவு பிரிவாக அச்சிடுவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரிவு பிரிவாக அச்சிடப்படும் நூல்கள் அடுத்த ஆண்டு முதல் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-60,10

# இடைக்கால சபையை நிறுவ சர்வதேச அழுத்தம் தேவை

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்தை மிகவும் தீவிரமாகப் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் வலியுறுத்த வேண்டுமென்று விடுதலைப புலிகளுடனான நேற்றைய சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுக் கிளிநொச்சியில் சந்தித்து பேசிய பின் அச்சந்திப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே சம்பந்தன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

புலிகளின் முக்கிய பிரமுகர்களுடனான சந்திப்புக் குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

நேற்றைய சந்திப்பில் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட தன்னாட்சி அதிகாரமுள்ள இடைககால நிர்வாக சபை அமைப்பது குறித்து விரிவாகக் கலந்துரையாடியுள்ளோம்.

தன்னாட்சி அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாக சபை அமைப்பது தொடர்பாக சர்வதேச சமூகத்தின் மூலம் இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நாம் மேற்கொளள வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தன்னாட்சி அதிகாரமுள்ள இடைககால நிர்வாக சபை அமைப்பது தொடர்பாக ஜே.வி.பி.கூறியிருக்கும் கருத்து அவர்களுடைய கருத்தே அது பெரிய சிக்கலை ஏற்படுத்தும் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை.

எனினும் ஜே.வி.பியின் அத்தகைய கருத்துக்களை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.இடைக்கால நிர்வாக சபை ஏற்படுவதை ஜே.வி.பி விரும்பவில்லை என்றால். அவர்களுக்கு சமாதானத்தில் விருப்பமில்லை என்றே தான் பொருள் கொள்ள வேண்டியுள்ளது. ஜே.வி.பியின் கருத்துக்களைச் சமாளிக்க வேண்டிய பொறுப்பு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கடமையே தவிர எமது கடமையல்ல ஆனால் அவர்களது அனியாயமான போக்கை அம்பலப்படுத்துவதற்கு நாம் முயற்சியெடுப்போம் என்று சம்பந்தன் தெரிவித்துள்ளார். (ம)

### சமாதான...

தமிழினி,தமிழீழ அரசியல் துறையின் மாவட்டப் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

எதிர்காலத்தில் சமாதான முயற்சிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்கப்பட்டதை யடுததே நேற்றைய சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகளில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கடைப்பிடித்து வரும் "நழுவல்" போக்கினால் சமாதானம் என்பது கேள்விக் குறியாகவுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் கூட்டுக் கட்சியரன ஜே.வி.பி விடுதலைப் புலிகளினால சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலத் தனனாட்சி அதிகார சபை தொடர்பாக அண்மையில் தெரிவித்திருக்கும் கருத்து சமாதானப் பேச்சுவார்த்தைகளைச் சீர்குலைக்கும் வகையில் அமைந்ள்ளது.

இநநிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தமதுசெயற்பாடுகளையும் தீவிரப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென்றும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் சமாதானச் சூழ்நிலை ஏற்பட்டு அதன் மூலம் புனரமைப்பு வேலைகள் முன்னெடுக்கப்படல் வேண்டுமென்பது சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பாகும். எனவே சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானச் சூழ்நிலை ஏற்படாதவிடத்து சர்வதேச நிதியுதவி கிடைப்பது கேள்விக்குறியாவே உள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சகல முயற்சிகளையும் சர்வதேச நாடுகள் எடுத்து வருகின்றன.

நடுநிலை நாடுகள் யாவும் சமாதானத்தின் தேவைபற்றி இலங்கை அரசுக்கு வலியுறுத்தி வருகின்றன. எனினும் இலங்கை அரசு தரப்பில் இருந்து சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான ஆரோக்கியமான முடிபுகள் எதுவும் எடுக்கப்படவில்லை. இது சமாதான நடவடிக்கை குறித்த ஜனாதிபதியின் நழுவல் போக்கையே எமக்கு எடுத்துக் காட்டுகின்றது என்று சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார். (ம)

# விடைத்தாள் திருத்தும் பணி மும்முரம் பெறுபேறுகள் ஆகஸ்டில் வெளியாகும்

(கொழும்பு)

கடந்த மாதம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப்பரீட்சையின் முதாலம் கட்ட விடைத்தாள் திருத்தும் பணிகள் முடிவடைந்துள்ளன.இவை கடந்த மே மாதம் 23ஆம் திகதி ஆரம்பமாகியிருந்தன. இரண்டாம் கட்டத் திருத்தும் பணிகள் 31இல் ஆரம்பமாகியிருந்தன. இவை இம் மாதம் 13ஆம் திகதி முடிவடையவுள்ள நிலையில் இறுதிக் கட்டத் திருத்தும் பணிகள் இம் மாதம் 8முதல் 21 வரை நடைபெறவுள்ளன.

விடைத்தாள் திருத்தும்பணிகள் வாரத்தின் ஏழு நாட்களிலும் காலை 8 தொடக்கம் மாலை 5 மணிவரை தொடர்ச்சியாக நடை பெற்று வருவதாகவும் இதன் அடிப்படையில் பெறுபேறுகளை எதிர் வரும் ஆகஸ்ட் முதல் வாரத்தில் வெளியிடக் கூடியதாக இருக்குமெனவும் கல்வித் திணைக்கள உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர். திருத்தும் பணிகளில் நாடு முழுவதும் 25 ஆயிரம் பேர் ஈடுபடவுள்ளனர்.

மாணவர்களை இவ்வருடமே பல்கலைக் கழகங்களுக்கு உள் வாங்கும் பொருட்டே சகல வேலைகளும் விரைவாக மேற்கொள்ளப் படுகின்றன என்றும் இது தொடர்பாக கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குமிடையில் கடந்தவாரம் பேச்சுக்கள் நடைபெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-6)



கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தங்ககத்தை தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தனது துணைவியார் சகிதம் கலந்து கொண்டு நேற்று முன்தினம் திறந்து வைத்த நிகழ்வின் காட்சிகள்சில...

### பத்திரிகையாளர்களின்...

பட ஊடக அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் மேற்படி மாநாட்டில் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஆகியோர் பங்குபற்றுவது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாக இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் ஆர்.துரைரட்ணம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,மேற்படி மாநாட்டில் ஆராய்ந்தெடுக்கப்படும் இறுதி முடிபுகள் தீர்மானங்கள் ஆகியன எல்லை கடந்த பத்திரிகையாளர் அமைப்பு மறறும் சர்வதேச நாடுகளின் தூதுவராலயங்கள் ஆகிவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கழை. (ந-43)

## தொழில் அமைச்சர் சுவிஸ் பயணம்

சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் வருடாந்த உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக தொழில் உறவுகள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் அதாவுல்லா செனிவிரத்தினா நேற்று சுவிஸ் லாந்திற்குச் சென்றுள்ளார்.

எதிர் வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள இம் மாநாட்டில் சர்வதேச தொழில் ஸ்தாபனத்தில் அங்கம்வகிக்கும் நாடுகள் எதிர் நோக்கும் தொழில் பிரச்சினைகள், தொழிலாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் இம்மாநாட்டில் கலந்தாலோசிக்கப்படவுள்ளது. (ச)

## இந்தியாவிலிருந்து வந்தவர்கள் கைது

இந்தியாவிலிருந்து படகுகள் மூலம் வந்த 29 இலங்கை அகதிகளை தலைமன்னார் கடற்கரையில் வைத்து கடற்படையினர் கைது செய்து மன்னார்பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவர்கள் யுத்த காலத்தில் வடபகுதியில் இருந்து இந்தியாவிற்குச் சென்று தமிழ் நாட்டில் தங்கியிருந்தவர்கள் என பொலிஸ் விசாரணையின் போது தெரிய வந்துள்ளது. (ச)

### பிரதி அமைச்சர்...

துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கே.வி.சோமபால தெரிவித்துள்ளார்.

இந்தத் துப்பாக்கிப்பிரயோகமானது இளைஞர் விவகார விளையாட்டுத் துறை பிரதி அமைச்சருக்கே இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டதென்று தகவல்கள் வெளியாகியுள்ளதாக அவர் தெரிவித்தார். (ச-121)


## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* கணனி பக்க அமைப்பாளர்கள் (ஆண்கள் இரவுக்கடமை)
* கணனி பக்க அமைப்பாளர்கள் (பயிலுநர்கள் ஆண்கள்)
* அலுவலகச் செய்தியாளர்கள் (ஆண்கள்)
* ஓப்செட் மெசின் இயக்குநர்கள்
* ஓப்செட் மெசின் பயிலுநர்கள்
* பத்திரிகை மடிப்பவர்கள்
* சிற்றூழியர்கள்

தகுதியானவர்கள் தாங்கள் தெரிந்தெடுத்த பதவியை குறிப்பிட்டு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, *ஆளணி முகாமையாளர், வலம்புரி, இலக்கம் 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்* எனும் முகவரிக்கு 10.06.2004 க்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்.

குறிப்பு : யாழ். நகர மையத்திலிருந்து **10km** தூரத்திலுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*நிர்வாக உத்தியோகத்தர்.*

வலம்புரியின் வாரமலர் விலை : 16.00

சங்கு நாதம்
Sankunatham

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2035 தொலைபேசி 2223378 நாதம் : 13

இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கை தமிழருக்குச் சாதகமாகத் திரும்புமா?
-டொறிங்ரன்

யாழ்.புதிய குடியிருப்பு மக்களுக்கு விடிவு கிடைப்பது எப்போது?
-க.சதீபன்

ஒலிம்பிக் கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கையில்...
-நோயல்

வியாசர் பதில்கள். ஆலடி மாநாடு சினிமாச் சிதறல். சிறுகதை மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்

வெள்ளி வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்கு நாதம்

**புத்தகங்கள் விற்பனைக்கு**

பல்கலைக் கழக மாணவர்களுக்குரியதும், **A/L** மாணவர்களுக்குரிய பௌதிகவியல், புள்ளிவிபரவியல் தூய பிரயோக கணித புத்தகங்கள் ஆங்கில தமிழ் மொழியில் விற்பன்னக்குண்டு, ஆங்கில நாவல்களும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:ஆசிரியர்
ஆர்.பாலசுப்பிரமணியம்
B.Sc(CEY)Dip.in.Ed
17/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (8551)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆங்கிலம் படிக்கின்றீர்கள்,புத்திசாலியாகவுமிருக்கிறீர்கள் ஆனால் கதைக்க முடியவில்லையா? கவலை வேண்டாம். **SPOKEN ENGLISH** By. விக்னேஸ்வரன ஆச்சாரி. 426(302) **K.K.S** வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை (8550)


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.06.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.